ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

விஶதவாக்ஶிகாமணியாய்

யதிவரபுநரவதாரபூதராய்

யதீந்த்ரப்ரவணரென்னும்

நிரூபகநாமதேயமுடையரான

மணவாளமாமுனிகள்

திருவாய்மலர்ந்தருளிய

# யதிராஜவிம்ஶதி.

இதற்கு

ஸ்ரீபிள்ளைலோகஞ்ஜீயரருளிச்செய்த

வ்யாக்யாநம்.

இவை,

ஜீயர்ஸந்நிதி - திருமலாசார்யர்,

அரசாணிபாலை - கந்தாடை -

விஜயராகவாசார்யர்,

இவர்களால்பரிஷ்கரிக்கப்பட்டு.


திருவல்லிக்கேணி:

ஸரஸ்வதீபண்டாரமுத்ராக்ஷரசாலையில்

முத்ரிதம்.

கஅஅச (வரு)

Cl. 42786
1990
Tel 1431



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸவ்யாக்யானமான

# யதிராஜவிம்ஶதி.

## தனியன்.

எரும்பியிலப்பா அருளிச்செய்தது.

యస్తుతిం యతిపతిప్రసాదనీం వ్యాజహార
యతిరాజవింశతిమ్ । తం ప్రపన్నజన
చాతకామ్బుదం నౌమి సౌమ్యవరయోగిపుఙ్గవమ్ ॥

## ப்ரவேசம்.

“தொண்டர்க்கமுதுண்ணச் சொன்மாலைகள்சொன்னேன்” என்கிறபடியே ஸமஸ்தரான ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு போக்யமாகவவதரித்த திருவாய்மொழியிலவகாஹித்து அதில்சப்தரஸம்

ஆர்த்தரஸம் பாவரஸம் இவற்றை யநுபவித்து ததேகநிஷ்டராய் தத்வ்யதிரிக்த ஶாஸ்த்ரங்களை த்ருணவத்ப்ரதிபத்திபண்ணியிருக்கையாலே திருவாய்மொழி யபிமதார்த்தத்தையே தமக்கு நிரூபகமாகவுடையராய் ஆழ்வார்திருவடிகளில் கைங்கர்யமே அனவரதம் செய்துகொண்டுபோரும் திருவாய்மொழிப்பிள்ளை ஸ்ரீபாதத்திலேயாஶ்ரயித்து, த்ராவிடவேத ததங்கோபாங்கங்களான ஸமஸ்த திவ்யப்ரபந்த தாத்பர்யங்களையும் அவருபதேஶமுகத்தாலே லபித்து, * மிக்கவேதியாவேதத்தினுட்பொருளான சரமபர்வத்திலே நிஷ்டராய், ஶேஷித்வ ஶரண்யத்வ ப்ராப்யத்வங்கள் மூன்றும் பிள்ளைவிஷயத்திலே யநுஸந்தித்து ததேகநிஷ்டராயெழுந்தருளியிருக்கிற ஜீயரை, பிள்ளை தாமேயுகந்து உடையவர்திருவடிகளிலே காட்டிக்கொடுக்கையாலே அவர்திருவடிகளிலே மிகவும்ப்ரவணராய், தத்குண சேஷ்டிதங்களைப்பேசி யநுபவிக்கவேண்டும்படியான தஶைபிறந்து தத்வைபவத்தைப்பேசுகிறவிவர்; சரமோபாயநிஷ்டரான சரமாதிகாரிகளுக்கு அநவரதாநுஸந்தேயங்களான சரமார்த்தங்களை இப்ரபந்தமுகேந வெளியிடாநின்றுகொண்டு, ஸ்வாபேக்ஷிதங்களையும் அவர்திருவடிகளிலே அபேக்ஷித்துத்தலைக்கட்டுகிறார்.

శ్రీమాధవాంఘ్రిజలజద్వయనిత్యసేవా
ప్రేమావిలాశయపరాంకుశపాదభక్తమ్ ।
కామాదిదోషహరమాత్మపదాశ్రితానాం
రామానుజం యతిపతిం ప్రణమామి మూర్ధ్నా ॥

இதில் முதல்ஶ்லோகத்தாலே, ஆழ்வார்திருவடிகளில் ப்ரேமபௌஷ்கல்யத்தையும் ஸ்வாஷி மாநாந்தர்ஹ்ருதருடைய தோஷங்களைப்போக்கி ரக்ஷிக்கும்படியையும் பேஶாநின்றுகொண்டு, தொடங்கின ஸ்தோத்ரம் தடையறநடக்கத்தக்கதாக உடையவர்திருவடிகளிலே விழுகிறார்.

( ஶ்ரீமாதவாங்க்ரிஜலஜத்வயேத்யாதி ) “திருமாலேநானுமுனக்குப்பழவடியேன்” என்கிறபடியே – பகவச்சேஷத்வமே ஸ்வரூபமாகையாலே, ஸ்வரூபாநுரூபமான புருஷார்த்தமும் பகவத்விஷயகைங்கர்யமாயிருக்கும்; ஆகையிறே “திருமாற்கரவு- ஶென்றார்க்குடையாம்” என்று – நித்யஸூரிகளில் தலைவரான திருவனந்தாழ்வான் அவனுமவளுமானசேர்த்தியிலே கிஞ்சித்கரிக்குமென்று சொல்லுகிறது. அந்தக்கருத்தலையில் வாஸனையாலேயிறே * தொடர்ந்து குற்றேவல்செய்யப்போந்தவிடத்திலும் “பவாம்ஸ்து ஸஹவைதேஹ்யா” என்றும் “அஹம்ஸர்வம்கரிஷ்யாமி” என்றும் அவர்ப்ரார்த்தித்தது;

அப்படியே, ஆழ்வாரும் " அடிமைசெய்வார் திருமாலுக்கு" என்றும் " கோலத்திருமாமகளோடுன்னைக்கூட" என்றும் - ஶ்ரிய:பதிக்கே கைங்கர்ய ப்ரதிஸம்பந்தியாக வருளிச்செய்தாரிறே; ஆகையாலே, ஶ்ரிய:பதியான வெம்பெருமான்திருவடித்தாமரைகளில் நித்யகைங்கர்யத்திலயாசையாலே கலங்கின திருவுள்ளத்தையுடையரானஆழ்வார் திருவடிகளில் ப்ரேமமேதமக்கு நிரூபகமாகவுடையராயிருக்குமவரென்கிறது. " மாயா: யவோமாயவ:" என்று-மாயவஸப்தத்தாலே ஶ்ரியபதித்வம் ஸித்யமாகையாலே, ஶ்ரீஸப்தம்ஔபசாரிகம். " ஶ்ரீமாதவன்கோவிந்தன் " என்று ஆழ்வாருளிச்செய்த திவ்யஸூக்தியையுட்கொண்டாய்த்து இவரிப்படியருளிச்செய்தது. உடையவர்க்கு வைபவஞ்சொல்லுகிறவளவில், ஜ்ஞாநபக்திவைராக்யங்களை இட்டுச்சொல்லுகையன்றிக்கே, ஆழ்வார்திருவடிகளில் ஸம்பந்தத்தையிட்டேற்றஞ்சொல்லுகைக்கடி "மாறனடிபணிந்துய்ந்தவன்" என்று பிள்ளையமுதனாருளிச்செய்த திவ்யஸூக்தியாய்த்து. அங்க்ரிஸப்தத்தாலே - திவ்யமங்களவிக்ரஹயோகஞ்சொல்லுகிறது. ஜலஜஸப்தத்தாலே - திருவடிகளில் ஸௌகும்யத்தையைச்சொல்லுகிறது. த்வயஸப்தத்தாலே- "உன்னிணையடித்தாமரைகள்" என்கிறபடியே இரண்டுதாமரைப்பூவை ஒழுங்குபட நிரைத்துவைத்

தாப்போலேயிருக்கிற ஶேர்த்தியமூகைச்சொல்லுகிறது. ஸ்வாஶஸ்த்தாலே – ஶேஷவ்ருத்தியைச்சொல்லுகிறது. நித்யஶஸ்த்தாலே - "ஒழிவில்காலமெல்லாம்" எனகிறபடியே இதுதான் யாவதாத்மாஸாவியென்னுமிடம்சொல்லுகிறது. இதுதான் "உடனாய்மன்னி வழுவிலாவடிமைசெய்யவேண்டும்" என்றுசொன்ன ஸர்வதேசத்திலும் ஸர்வகாலங்களிலும் ஸர்வாவஸ்தைகளிலும்பண்ணக்கடவ ஸர்வவிதகைங்கர்யங்களுக்கு முபலக்ஷணம். ஏவம்விதமானகைங்கர்யத்தைப்பெறவேணுமென்னும் ப்ரேமபாரவஶ்யத்தாலேயாய்த்து "ஶிந்தைகலங்கித் திருமாலென்றழைப்பன்" என்று இவர் கூப்பிட்டது; நாடடங்க அந்நபாநாதிகளுக்கு வாய்புலற்றிக்கூப்பிடாநிற்க, கைங்கர்யத்தாலல்லது ஶெல்லாமல் கூப்பிட்டலமாக்கிறவிவர்படி உஸயவிஸ-ருதியிலும் வ்யாவ்ருத்தமாயிருக்கையாலே; இப்படியிருக்கிற ஆழ்வாருடைய ஸ்வஸாவத்திலேவிஷ்யராய், இவருடையதிருவடிகளிலே நிரவதிகப்ரேமயுக்தராயாய்த்துஎம்பெருமானிருக்கும்படி. (காமாதீத்யாதி) ஸஹவத்கைங்கர்யவிரோதியான ஶஸ்தாதிவிஷயப்ராவண்யரூபமான காமமும் ஆதிஶஸ்தஸங்ருஹிதங்களான ஸஹவதேகரக்ஷ்யவிரோதியான அர்த்ததக்ருஷ்ணையும்தஶேஷஶேஷத்வவிரோதியான அஹங்காரமும் முதலானதுர்க்குணங்களை, தம்முடைதிருவடிகளிலாஶ்ரயித்தவர்களுக்கு, ஸ்வாபதேஶா

நுஷ்டானங்களாலும் ஸ்வகடாக்ஷவிசேஷாதிகளாலும் ஸவாஸனமாகப் போக்குமவரென்கை. (ராமாநுஜம்) "நவேத் ராமாநுஜேத்யேஷா சதுரா சதுரக்ஷரீ | காமவஸ்தாம்ப்ரபத்யந்தே ஜந்தவோ ஹந்த மாத்ருஶ:" என்று அறிவுடையார் பேசும்படி, மோக்ஷஹேதுவான திருநாமத்தையுடையவரென்கை. (யதிபதிம்) ஜிதேந்த்ரியரான ஸந்யாஸிகளுக்குத் தலைவரானவரென்கை. இத்தால் - கீழ்ச்சொன்ன ஆஶ்ருததோஷ நிவர்த்தகத்வத்துக்கடியான ஶமதமயோகம்சொல்லுகிறது. (ப்ரணமாமி) என்கிறமாத்ரமேயமைந்திருக்க (மூர்த்நா ப்ரணமாமி) என்கிறது - விநயவைபவத்தையநுஸந்தித்துமாநஸமான ப்ரஹ்வமாத்ரத்தில் நிற்கையன்றிக்கே, தம்முடையவாதராதிஶயத்தாலே ஶிர்ஸராய் திருவடிகளிலே தலையைமடுக்கிறாரென்னுமிடந்தோற்ற.

శ్రీరఙ్గరాజచరణామ్బుజరాజహంసం
శ్రీమత్పరాఙ్కుశపదామ్బుజభృఙ్గరాజమ్ ।
శ్రీభట్టనాథపరకాలముఖాబ్జమిత్రం
శ్రీవత్సచిహ్నశరణం యతిరాజమీడే ॥ ౨

இப்படி துடங்கின ஸ்தோத்ரம் நிர்விக்நமாகத் தலைக்கட்டுகைக்காக அவர் திருவடிகளையாஶ்ரயித்து அத்தாலே நிறம்பெற்றவராய்க்கொண்டு, எம்பெருமானாருடைய ஸமஸ்த ஸாமவதவிஷய

ப்ரேமபௌஷ்கல்யத்தையும் ஆஶ்ரிதஜநங்களுக்கு பரமப்ராப்யராயிருக்கிறபடியையும்சொல்லி ஸாரமாகவேத்துகிறார்.

(ஶ்ரீரங்கராஜேத்யாதி) ஶுபவஷ்விஷயத்திலவந்தால் வெளிறின அம்ஶத்தைக்கழித்து ஸாரமான அம்ஶத்திலேயாய்த்திருப்பது. பரவ்யூஹங்கள் நித்யமுக்தர்க்கும் முக்தப்ராப்யர்க்கும்முகங்கொடுக்கும்விடமாகையாலும், விபவாந்தர்யாமித்வங்கள் புண்யம்பண்ணினார்க்கும் உபாஸகர்க்கும் முகங்கொடுத்துநிற்கிற நிலையாகையாலும், அவ்வோநிலைகளுக்கு ஓரோகுறைகளுண்டு; அடியோமுக்கே யெம்பெருமானல்லீரோ" என்று பரத்வாதிகளுக்காளாகாத பிற்பாடர்க்கும் முகங்கொடுத்துநிற்கும் அர்ச்சாவதாரத்துக்குச்சொல்லலாவதொரு குறையில்லையே!. இப்படிநீர்மைக்கெல்லைநிலமான அர்ச்சாஸ்தலங்களுக்கெல்லாம் வேர்பற்றான கோயில்நிலையிலேயாய்த்து எம்பெருமானார் ஆழங்கால்பட்டிருப்பது. ஆகையாலே, பெரியபெருமாள் திருவடிகளில் மிக்க ஸௌம்யதையையநுபவித்து ஸரஸஞ்சரணம்பண்ணும்படிசொல்லுகிறது. பரமபதைஶ்வர்யத்தையும் சிராங்கிக்கும்படியான விபவைஶ்வர்யத்தையுடைத்தாய், "ரதிங்கத:" என்கிறபடியே ஸர்வஜ்ஞனை ஸர்வேஶ்வரனையும் ஸ்வஸௌம்ய

தையாலே ஆழங்கால்படுத்தும்படி நிரதிசய ஸௌந்தர்யமான திருவரங்கத்திருப்பதியை "அரங்கமாளி" என்கிறபடியே ஸ்வாமிநமாக வாண்டுகொண்டுபோருகையால் வந்தபெருமையையுடைய * அரங்கநம்மான் திருக்கமலபாதத்தில் அலையெறிகிறமது-ப்ரவாஹத்திலே சிறகடிக்கொண்டுவர்த்திக்கிற ஹம்ஸஸ்ரேஷ்டமாயுள்ளவரையென்கை. "பொன்னரங்கமென்னில் மயலே பெருகுமிராமாநுஜன்" என்னும்படியிறே இத்தேசத்திலிவர்க்குண்டான ப்ராவண்யம். (ஸ்ரீமத்பராங்குசேத்யாதி) இனி ஸாமவதவிஷயத்திலும்வந்தால், ஸ்வயத்னத்தாலே ஈஸ்வரனைப்பெறப்பார்க்கும் ப்ரபத்தியிலே அன்வயித்திருக்கச்செய்தே தங்கள்ஸ்வீகாரத்தை ஸாதநமாகக்கொள்ளுமவர்களையும் அவனேயுபாயமாகக்கொள்ளாநிற்கச்செய்தேயும்பெற்றபோது,பெருகிறோமென்று ஆறியிருக்குமவர்களையுமகிழ்ந்து "ப்ராப்யப்ராபகங்களிரண்டுமவனே" என்கிறத்வயவஸித்து "இப்போதே பெற்றநுபவிக்கவேணும்" என்னுமதிநிர்பந்தத்தாலேகண்ணும்கண்ணீருமாய்த்துடிக்கும்படியான ஆர்த்தியையுடையராய், பரவ்யூஹாதி ஸ்தலங்களிற்காட்டில் "கண்டியூரரங்கம்" இத்யாதிப்படியே – கோயில்தொடக்கமாக அர்வாவதாரஸ்தலங்களிலே ஆழங்காற்பட்டிருக்குமாழ்வார்களளவிலேயாய்த்துத் திருவுள்ள

ழன்றியிருப்பது. ஆகையாலே, கைங்கர்யாஹிநி
வேஶமாகிற ஸ்வரூபாநுரூபமான ஸம்பத்தையு
டையராய், நிரங்குஶஸ்வதந்த்ரனான ஈஶ்வரனையும்
'ஈஶ்வரோஹம்'' என்றிருக்கும் ஸம்ஸாரிகளை
யும் ஸ்வஸூக்திவிஶேஷங்களாலே வஶீக்ருதரா
ய்த்தலைஶீய்க்கும்படி பண்ணுகையாலே பராங்கு
ஶரென்னும் திருநாமத்தையுடையராயிருக்கிற,
ஆழ்வார்களில் தலைவரான நம்மாழ்வாருடைய பர
ஸௌம்யமான திருவடிகளில் ஸௌம்யதாநுஸந்
தாநமே நித்யஜீவநமாகவுடையவரென்கை. நிற்
"பராங்குஶபாதபக்தம்'' என்று — அவர் திருவ
டிகளிலே ப்ரேமத்தையுடையரானமாத்ரம்ஶொ
ல்லிற்று; இங்கு, அந்தப்ரேமாநுரூபமாக வவர்
திருவடிகளில் ஸௌம்யதையுள் புக்கநுபவிக்கும்
படிசொல்லுகிறது. அல்லாதவாழ்வார்களிற்க்
காட்டில் நம்மாழ்வாருக்குண்டான வ்யாவ்ருத்தி
தோற்ற, அவர்களோடேகூடவநுஸந்திக்கிறமா
த்ரம்போராதென்று தனியேமுற்படவநுஸந்தித்
தார்; இப்போது, அவர்களோடேகூடவநுஸந்
தித்தருளுகிறார். பெரியபிராட்டியாரை அல்லாத
மஹிஷிமாரோடேகூட வநுஸந்தியாநிற்கச்செய்
தேயும்முந்தரவே "ஸ்ரீயஃபதி'' என்று அவள்
வ்யாவ்ருத்திதோற்ற உடையவரநுஸந்தித்தருளி
னாப்போலே, அல்லாத வாழ்வார்களிவர்க்கு
அவயவபூதரென்னும்படியிறே இவருடையவே

ற்றம்.(ஸ்ரீஸட்டநாயேத்யாதி) மங்களாஸாஸநரூப மாகவைஸ்வர்யத்தையுடையராய் ஸ்ராஹ்மணோ த்தமரான பெரியாழ்வாருடையவும், பாஹ்யகு ஷ்ருஷ்டிகளாகிற ப்ரதிபக்ஷங்களுக்கு ம்ருத்யுபூ தரான திருமங்கையாழ்வாருடையவும், திருமுக மண்டலமாகிற தாமரையை அலர்த்துமாதித்ய னென்கை. "ஆருமாளார்" என்கிறவன் தனி மைதீர ஆள்சேர்த்தருளுகையாலும், பாஹ்ய குத்ருஷ்டிகளைக்கிழங்கெடுத்துப் பொகடுகையா லும், இவரைக்கண்டபோதே அவர்கள் முகம லர்ந்தபடி. (ஸ்ரீவத்ஸவிஹ்நஸரணம்) கீழ்,"ஆத் மபஷாஸ்ருதாநாம்-காமாதிதோஷஹரம்" என்று- ஸாமாந்யேந, திருவடிகளையாஸ்ரயித்தவர்களுக்கு உபாயபூதரென்னுமிடம்சொல்லிற்று; இங்கு, அவர்களெல்லாருமொருதட்டும் தாமொருதட் டுமாம்படியான வேற்றத்தையுடையராய்ஸிஷ்யா வார்யக்ரமத்துக்கு ஸீமாபூமியான கூரத்தாழ் வானுக்கு ப்ராப்யப்ராபகங்களிரண்டும் தாமேயா யிருக்கும்படிசொல்லுகிறது. (யதிராஜமீடே) இப்படி ஆழ்வார்களுகந்தவிஷயமான பெரிய பெருமாளளவிலும் * முகில்வண்ணனடியையு டைந்தருள் பூடியுய்ந்த ஆழ்வார்கள்விஷயத்தி லும்தத்தத்விஷயானுரூபமான ப்ரேமபூர்த்தியை யுடையராய், ஆஸ்ருதர்க்குப்ராப்யப்ராபகபூதரு மாயிருக்குமவரென்று ஸ்துதிக்கிறேனென்கை.

వాచా యతీన్ద్ర మనసా వపుషా చ యుష్మ
త్పాదారవిన్దయుగళం భజతాం గురూణామ్ ।
కూరాధినాథకురుకేశముఖాద్యపుంసాం
పాదానుచిన్తనపరస్సతతం భవేయమ్ ॥ 3.

"நம்மைப்பற்றினார்க்கு ப்ராப்யப்ராபகமும் நாமேயாகச்சொன்னீரே, நம்மைப்பற்றியிற்கிற வுமக்குமிதொவ்வாதோ" என்று எம்பெருமானார்க்குத் திருவுள்ளமாக; எனக்கங்ஙனன்று, தேவர்திருவடிகளே ப்ராப்யமும் ப்ராபகமுமென்று பற்றியிருக்கும் கூரத்தாழ்வான்முதலானவர்கள் திருவடிகளே ப்ராப்யமும் ப்ராபகமுமாகப்பற்றியிருக்குமவனாகவிவனும்என்று எம்பெருமானார் திருவடிகளிலே ப்ரார்த்தித்தருளுகிறார்.

(வாசாயதீந்த்ரேத்யாதி) "ப்ரத்யக்ஷேகுரவ ஸ்துத்யா:" என்கிறபடியே – பகவத்விஷயத்துக்கு உபகாரகரானவாசார்யர்களை ஸ்துதிக்கைக்கும் ஸ்மரிக்கைக்கும் வணங்குகைக்குமாய்த்து இவனுக்கு வாங்மநஃகாயங்களை அடியிலேயுண்டாக்கிற்று. "விசித்ராதேஹஸம்பத்தி:" இத்யாதிப்படியே – ஸர்வேஶ்வரன் தன்னையாஶ்ரயிக்கக் கொடுத்தகரணங்களைக்கொண்டு அந்யபரராய்த் திரிகிறவிவ்விபத்தியிலே, பகவத்ஸமாஶ்ரயணமாத்ரத்திலே துவளுகையன்றிக்கே அத்தையும் ப்ரதமாவதியென்றுகழித்து சரமாவதியான ஆ

வார்யவிஷயத்திலே கரணத்ரயத்தையும் விநியோ
கிக்கும்படியானவேற்றமுடைய விவர்களும்சில
ரே! என்றுவிஸ்மயராய், அவர்கள் திருவடிகளை
ப்பற்றுகிறார். (வாவா) "வாயவனையல்லதுவா
ழ்த்தாது" என்று ப்ரயமபாவநிஷ்டர் ஸமவஷ்வி
ஷயமல்லது மற்றொருவிஷயத்தை யேத்தாதாப்
போலே, இவர்களும் வகுத்தவிஷயமொழியமற்
றொன்றையேத்தாதபடி. அவர்களுக்குவ்யாவர்த்
தம் தேவதாந்தரம் ; இவர்களுக்கு ஸமவஷ்விஷ
யம். "நாவகாரியம்" என்றவர்களிறேஇவர்கள்.
(மநஸா) "மநஃபூர்வோ வாகுத்தர:"என்கிறநிய
மமில்லையாய்த்திவர்களுக்கு. வாய்திறக்க இவ்வி
ஷயத்திலல்லதுவாய்திறவாதாப்போலே நெஞ்
சுக்கும் விஷயமதுவல்லதில்லையாய்த் திவர்களு
க்கு. திருக்கோட்டியூர்நம்பியை "உமக்குஸ்யா
நத்துக்கு விஷயமேன்" என்று கேட்டபின்பு,
அருளிச்செய்தவார்த்தையைநினைப்சது.(வாவா-
மநஸாவபுஷாவ)என்று-கரணங்களுக்குத் தனித்
தனியுண்டானப்ராவண்யம்சொல்லுகிறது. (யுஷ்
மத்பாதாரவிந்தயுமளம்ஸஜதாம்) இவர்கள் வே
ப்பங்குடிநீரிருக்கிறபடி. இவ்வாத்மாவுக்குவகு
த்தஶேஷியான தேவருடைய, நிரதிஶயபோக்ய
மாய் ஶோர்த்தியமுகையுடைத்தான திருவடிகளை
ப்ராப்யமாகவும் ப்ராபகமாகவும் நிரந்தரமாகஸே
விக்குமவர்களுடைய. "நித்யம்யதீயசரணௌ
ஶரணம்மதீயம்" என்று — ஆசார்யன்திருவடி

ளை ப்ராப்யமும் ப்ராபகமுமென்னுமத்தைபர மாசார்யரருளிச்செய்தாரிறே. திருவடிகளைவாக் கேலேஸஜிக்கையாவது-தத்வைலக்ஷண்யத்தைப் புகழுகை ; மநஸ்ஸாலேஸஜிக்கையாவது-திருவ டிகளை நெஞ்ஜாலேநினைக்கை ; ஶரீரத்தாலேஸ ஜிக்கையாவது -* ப்ரணாமாதிக்கு விஷயமாக்கு கை. ( பாதாநுசிந்தநபரஸ்ஸததம்ஸவேயம் ) அவர்கள் தேவருடையதிருவடிகளை அநவரதா நுஸந்தாநம்பண்ணுமாப்போலே, இவ்வநுஸந் தாநம்காதாசித்கமாகையன்றிக்கே நித்யமாகவே ணுமென்கிறது, அநுசிந்தநம் - அநுஸ்யூதம்சி ந்தநம்என்றுகொள்ளும்போது ,ஸததபதம்ஸங் கதமாகாது. (அநு)ஹிதார்த்திலேயாய், "க்ஷி ஷ்ணோநுஸ்மரணம்'' என்கிறவிடத்திற் போலே தத்விஷய ஶேஷத்வாநுஸந்தாநத்தைச்சொல்லு கிறது. " உன்தொண்டர்கட்கே அன்புற்றிருக் கும்படி என்னையாக்கி யங்காட்படுத்தே'' என் றவர்த்தைச்சொல்லுகிறது. இவர்க்கிவ்விஷய த்திலுண்டானஸாவஸங்கத்திலூற்றம், அவர்வ ரமத்திலே ப்ரார்த்திக்கை, ப்ரமத்திலே ப்ரார் த்திக்கும்படியாய்த்து. ... ... ரு.

నిత్యంయతీన్ద్ర తవదివ్యవపుస్స్మృతౌ మే
సక్తంమనోభవతువాగ్గుణకీర్తనేసౌ।
కృత్యంచదాస్యకరణంతుకరద్వయస్య
వృత్త్యన్తరేస్తువిముఖంకరణత్రయంచ॥ ౬ ॥

எம்பெருமானார்திருவடிகளுக்கு இப்படி அவிநாபூதராய் அவரையல்லதறியாத கூரத்தாழ்வான்போல்வாருடைய திருவடிகளிலே ஸேஷத்வத்தையும் ப்ரார்த்தித்தருளி, அவர்களளவிலூற்றத்தாலே, அவர்களுகந்த விஷயமான எம்பெருமானார் திருவடிகளிலே கரணத்ரயமும்ப்ரவணமாம்படி பண்ணியருளவேணுமென்று அவரைப்ரார்த்தித்தருளுகிறார்.

(நித்யம்யதீந்த்ரேத்யாதி) மே-மந: - தவதிவ்யவபுஸ்ஸ்ம்ருதௌ - நித்யம்-ஸக்தம்-பவது- அநாதிகால்ம் இதரவிஷயங்களிலேபழகிப்போந்தவென்னுடையமநஸ்ஸானது, தேவருடையதிவ்யமங்களவிக்ரஹத்திலே ஸர்வகாலமும் மண்டிவிஷயாந்தரஸ்மரணத்துக்காளாகாதபடி நன்றாகப்பொருந்தவதாகவும். "உன்றன் மெய்யிற்பிறங்கியசீரன்றிவேண்டிலன்" என்கிறபடியே - மநஸ்ஸுக்கு ஸுபாஸ்ரயமான அவலம்பநம் தேவருடைய திவ்யமங்களவிக்ரஹமேயாகவேணுமென்கை. (வாக்குணகீர்த்தநேஸௌ) இதுக்குமுன் பாஹ்யர்விஷயங்களை ஜல்பித்துப்போந்தவாக்கு, தேவருடையகல்யாணகுணங்களை வர்ணித்துக்கொண்டுபேசுகையிலேஸக்தமாகவேணுமென்கை. (க்ருத்யம்சேத்யாதி) அந்யவிஷயங்களுக்கு நிஷ்பலவ்ருத்திசெய்துபோந்தகைகளிரண்டுக்கும் க்ருத்யம், தேவருடைய திருவடிகளில் நித்யகைங்கர்யமாவதாக. (வ்ருத்யந்தரேஸ்துவிமுகமித்யாதி) தேவர்விஷயத்திலேகரணத்ரயமும்அபிமு

வமானாலும் விஷயாந்தரங்களில் வைமுக்யமில்லாதபோது இது நிலைநில்லாதென்றுபார்த்து, புறப்பூச்சான வைலக்ஷண்யத்தையுடையதேறய விஷயங்களை நினைக்கைசொல்லுகை தொழுகையாகிற வ்யாபாரத்திலின்றும் கரணத்ரயமும் முவம்மாறுவதாக. இத்தால் – "கையும்மனமுன் குணங்களையுன்னி" இத்யாதிப்படியே – கரணத்ரயத்துக்கும் எம்பெருமானார்விஷயத்தில் ப்ராவண்யத்தை இதரநிவ்ருத்திபூர்வகமாக ப்ரார்த்தித்தருளினாராய்த்து. ... ... ௪.

అష్టాక్షరాఖ్యమనురాజపదత్రయార్థ
నిష్ఠాంమమాత్రవితరాద్యయతీన్ద్రనాథ।
శిష్టాగ్రగణ్యజనసేవ్యభవత్పదాబ్జే
హృష్టాస్తునిత్యమనుభూయమమాస్యబుద్ధిః ॥౫॥

"எம்பெருமானே ஶேஷியும் உபாயமும் உபேயமுமென்று ஶாஸ்த்ரங்கள்சொல்லாநிற்க நீர் நம்மையும் நம்முடையாரையும் ஶேஷிகளுமுபாயஉபேயருமாகச்சொல்லாநின்றீர், அதென்கொண்டுநீர்சொல்லுகிறது" என்று எம்பெருமானார்க்குநினைவாக; ஸகலஶாஸ்த்ரஸாரமானதிருமந்த்ரம்இதுக்குமூலப்ரமாணம், அதில் ப்ரதிபாதிக்கிற அர்த்தத்துக்கு அநுரூபமானநிஷ்டையையும்தத்பலமான தேவர்திருவடிகளிலநுபவத்தையும் கந்தருளவேணுமென்று அ

( அஷ்டாக்ஷரேத்யாதி ) " ஓமித்யேகாக்ஷ ரம் । நமஇதித்வே அக்ஷரே । நாராயணாயேதிபஞ் சாக்ஷராணி। இத்யஷ்டாக்ஷரம்ஸந்தஸாமாயத்ரீ வேதி" என்று-திருமந்த்ரம் எட்டுத்திருவக்ஷரமா ய்மூன்றுபதமாயிருக்குமென்னுமிடம் ஶ்ருதிஸித் யமிறே.மநுஶப்தம்-மந்த்ரவாசி. மநுராஜமென் றது-மந்த்ரராஜமென்றபடி. திருமந்த்ரத்துக்கு- ராஜாவாகையாவது - வேதங்களும் ருஷிகளும் வைதிக புருஷர்களும் ஏககண்டமாக பரிக்ரஹிக் கையாலும், அர்த்தபூர்த்தியாலும், தானேஸ்வதந்த ரமாய்க்கொண்டு ஸகலபலங்களையும் கொடுக்கவ ற்றாகையாலும், உபாயாந்தர ஸஹகாரியாகையா லும், தன்னையொழிந்தவ்யாபகாவ்யாபகஸகலஸம வந்மந்த்ரங்களிலும் உத்க்ருஷ்டமாயிருக்கை. பத த்ரயங்களில் அர்த்தமாவது - ஆத்மாவினுடைய அநந்யார்ஹஶேஷத்வம் அநந்யஶரணத்வம் அந ந்யபோக்யத்வம் இவைகளும், தத்ப்ரதியோகி யான ஸர்வேஶ்வரனுடைய ஶேஷித்வஶரண்யத்வ ப்ராப்யத்வங்களும். அநந்யார்ஹஶேஷத்வாத்யா காரத்ரயமும், தத்விஷயத்திற்போலே ததீயவி ஷயத்திலுமுண்டாயிறேயிருப்பது; ஆகையிறே, திருமந்த்ரங்கற்ற திருமங்கையாழ்வாரும் "நின்தி ருவெட்டெழுத்தும் கற்றுநான்-உற்றதுமுன்னடி யார்க்கடிமை" என்று. அருளிச்செய்தது. இப் படி ஸாமாந்யேநததீயர்க்கெல்லாம் தத்ஸம்பந்த மூலமாகஶேஷித்வாதிகளுண்டாகையாலே, ததீ யவிஷயமாய்நிர்ஹேதுகமாக அடியிலேதன்னைய ங்கீகரித்தருளி இவ்வவஸ்தாபந்நனை ஸ்வாபா

ர்யவிஷயத்திலும் ஶேஷித்வாதிகளநுஸந்திக்க க்குறையில்லை; ஆகையால், பதத்ரயத்திலும்ஸொல்லுகிற வர்யங்களில் வரமபர்வபர்யந்தமான நிஷ்டையை, இதிலபேக்ஷையையுடையவடியேநுக்கு, இவ்வர்யத்தில் ருசியுடையாரைக்கிடையாத விவ்விஸ்ருதியிலே யிப்போதேதந்தருளவேணும். பெருவிடாய்ப்பட்டு "தண்ணீர் தண்ணீர்" என்று துடிக்கிறவனுக்கு, இவ்விடத்திலே இப்போதே விடாய்தீர்க்கவேணுமிறே. "நீர் நம்மையபேக்ஷித்தால் இப்படி உம்முடையவபேக்ஷிதம் ஸெய்யவேண்டும் ஹேதுவென்" என்ன; ஸொல்லுகிறது - (நாய) என்று. இத்தலையில்ஸொல்லலாவதொரு ஹேதுவில்லை, இவ்வாத்மாவுக்கு வகுத்தஶேஷியானதேவர் "இது நம்முடையதன்றோ" என்று இஸ்ஸம்பந்தமே ஹேதுவாகச்செய்தருளவேணுமென்கை. (ஶிஷ்டேத்யாதி) ஶிஷ்டராகிறார் - ஜ்ஞாநாநுஷ்டாநபூர்ணராய் கண்ணழிவற்றப்ராப்யருசியையுடையவர்கள்; அவர்களுக்கு அக்ரகண்யராகிறார் - கூரத்தாழ்வான்போல்வார்; இப்படியிருந்துள்ளவர்களாலே நிரந்தரமநுபவிக்கப்படாநிற்பதாயிருக்கிற, வகுத்தஶேஷியான தேவருடைய பரமபோக்யமான திருவடிகளை, இந்த்ரப்ராப்யம் பெறுமிடில் தரியாதபடியான விந்துவென்னுடையவைஷ்யியானது, யதாமநோரதமநுபவித்துக் களிப்பதாக. "உனதடிப்போதி லொண்சீராம்

தெளிதே னுண்டமர்ந்திடவேண்டி நின்பாலதுவே - போந்ததென்னெஞ்சம்பொன்வண்டு" என்றவர்யத்தை ப்ரார்த்தித்தபடி. ... ரு.

అల్పాపి మేనభవదీయపదాబ్జభక్తి
శ్శబ్దాదిభోగరుచిరన్వహ మేధతేహా।
మత్పాపమేవహినిదానమముష్యనాన్య
త్తద్వారయార్యయతిరాజదయైకసిన్ధో ॥௬॥

"ப்ராப்யருசியையுடையராய் புறம்புள்ள போக்யங்களில்நசையற்ற கூரத்தாழ்வான்போல்வாரன்றே நம்மை யநுபவிக்குமவர்களாகச் சொன்னீர், அவர்களைப்போலேயுமக்கு அவையிரண்டுமுண்டோ" என்ன; ஏகதேசமும் ப்ராப்யருசியற்றிருக்கிறபடியையும், இதரவிஷயருசிகொழுந்துவிட்டுவளருகிறபடியையும், விண்ணப்பம்செய்து, இவையிரண்டுக்குமடியான பாபத்தைப்போக்கி யருளவேணுமென்று ப்ரார்த்திக்கிறார்.

(அல்பாபிமேநேத்யாதி) (ஸவதீயபதாப்ஜ ஸக்தி: - அல்பாபிமேந) தேவர் திருவடித்தாமரைகளில் பூர்ணஸக்தியில்லாதமாத்ரமன்றிக்கே, அத்யல்பஸகதியும், இதரவிஷயவைபலனுணவெனக்கில்லை. ஆநுகூல்யலேஸமில்லையாகிலும்ப்ராதிகூல்யநிவ்ருத்திதானுண்டாகிலுமாமிறே,அதுவுமில்லையெனக்கென்கிறார் (ஸப்தாதீத்யாதி) தேவரீர் திருவடிகளிலநுஸவத்துக்கு விரோதியான

ஶப்தாதிவிஷயாநுபவஶ்ரத்தையை நாடோறும்வர்த்திஷ்ணுவாய்க்கொல்லா நின்றது, ஐயோ ! இத்தால் - த்ருதீயபாதார்த்த நிஷேதாவிரோதிசொல்லிற்று. இவ்விரண்டுக்குமடியேதென்ன (அமுஷ்யநிதாநம்-மத்பாபமேவஹி) என்கிறார்; ப்ராப்தவிஷயப்ராவண்யாபாவத்துக்கும் அப்ராப்தவிஷயப்ராவண்யத்துக்கும்காரணம், பாபியான வென்னுடையதுஷ்கர்மமிறே. அவதாரணத்தாலே - ஹேத்வந்தரத்தைக்கழிக்கிறது.(ஹி)ஶப்தம்-இவ்வர்த்தத்தினுடையப்ரஸித்தியைச்சொல்லுகிறது. (நாத்ய) ஈஶ்வரஸ்வாதந்த்ரய மிதுக்குஹேதுவன்று, அவன் உஜ்ஜீவநத்துக்கு க்ருஷிபண்ணுகிறவனாகையாலே. "உம்முடையகர்மதோஷத்தாலேவந்ததாகில் நம்மால் ஶெய்யலாவதுண்டோ" என்ன; என், ஶெய்யலாவதில்லையோ, அத்தை அடியேனளவில் கிட்டாதபடி தகைந்தருளவேணும். "நாமதுக்குஶக்தரோ" என்ன (ஆர்ய) ஶெய்யும் விரகறிகைக்குத்தக்க வறிவில்லையோ. (யதிராஜ) அறிந்தபடிசெய்யவல்ல ஶக்தியில்லையோ - ஜிதேந்த்ரியரானஸந்யாஸிகளுக்குத் தலைவராகையாலே அஹிமாநாந்தர்ஸதுருடையபாபத்தைப்போக்குகைக்கு ஶக்தியில்குறையில்லை. (தயைகஸிந்தோ) அந்தஜ்ஞாநஶக்திகளோரக்ஷணோபயோகியாகநடத்தும்க்ருபைக்கும் ஸங்கோசமுண்டோ. "அஸ்யதயைகஸிந்தோ:" என்று விஶேஷஜ்ஞர் ஆழங்கால் படும்படியன்றோ க்ருபாப்ரவாஹம். ஏகஶப்தத்தாலே-குணாந்தரங்கள்தடவிப்பிடிக்கவேண்டும்படிசொல்லுகிறது.

వృత్త్యాపశుర్నరవపుస్త్వహమీదృశోఽపి
శ్రుత్యాదిసిద్ధనిఖిలాత్మగుణాశ్రయోఽయమ్ ।
ఇత్యాదరేణకృతినోఽపిమిథఃప్రవక్తు
మద్యాపివఞ్చనపరోఽత్రయతీన్ద్రవర్తే ॥ ౮·

இப்படியெம்பெருமானார் திருவடிகளில் ப்ரேமாபாவத்துக்கும் இதரவிஷயப்ராவண்யத்துக்கும் ஹேதுவான பாபத்தைப்போக்கியருளவேணுமென்று ப்ரார்த்தித்தவர், மீளவும், பஹுத்ரயார்யநிஷ்டாவிரோதிகளாய் அநாதிகாலமேபிடித்துப்பண்ணிப்போந்த வக்ருத்யகரணஸமவஹபவாராதிகளும் இப்போது பண்ணிப்போருகிற க்ஷுத்ரமந்த்ரதேவதாபரிஸவாதிகளும் துடக்கமானவற்றை அநுஸந்தித்து, "இப்படி தோஷபூயிஷ்டனை நான் தேவர்திருமுன்னே கூசாதேநின்று இத்தை விண்ணப்பம்செய்தேன்" என்றுஹீதராய், தம்முடைய மௌர்க்யத்தையநுஸந்தித்தருளுகிறார் மேல்நாலுஶ்லோகத்தாலே.

(வ்ருத்த்யாபஶுரித்யாதி) ஶாஸ்த்ராப்யாஸாதிகளுக்குயோக்யமான மநுஷ்யஜந்மத்திலேபிறக்கையாலும், தத்விருத்தமானவக்ருத்யாதிகளிலே தடையறநடக்கையாலும், நரஸாம்யமும் பஶுஸாம்யமும்தமக்குண்டாகவநுஸந்திக்கிறார். (வ்ருத்த்யாபஶு:) என்னுடைய வ்ருத்தியைப்பார்த்தால், ஜந்யஜநக விபாகமற வர்த்திக்கும் பஶுவ்ருத்தியோடொக்கும். (நரவபு:) எடுத்தவுடம்பைப் பார்த்தால், ஶாஸ்த்ரவஶ்யமானமநுஷ்யஶரீரமாயி

க்கும். துஸ்ஸஹத்தால்-மநுஷ்யஸரீரபரிக்ரஹம்
ண்ணிவர்த்திக்கிற அல்லாதாரில் தமக்குண்டா
ர வ்யாவ்ருத்தியைச்சொல்லுகிறார். (ஈஞ்ருஸோ
) கீழ்ச்சொன்னபடியையுடையனு யிருக்கச்
செய்தேயும். தம்முடையதோஷப்பரப்புக்குப்பா
ரமிடப்போகாமையாலே - இப்படிப்பட்டவ
னென்கிறார். நம்முடையதோஷ மிதுவானபின்
உ நாமிவ்விஷயத்தைக்கிட்டுகை அயுக்தமெ
றுகைவாங்கவேண்டியிருக்க, அது செய்யாதவ
ரவன்றிக்கே, "இவனைப்போலே ஆத்மகுண
ர்ணனில்லை, ஆகையால் இவ்விஷயத்தைக்கிட்டி
பரிமாறுகைக்கு இவனத்தனை அதிகாரிகளில்
ல" என்று அறிவில் தலைநின்றவர்களெல்லா
ரும் தங்களிலேககண்டராய் ப்ரீதிக்குப்போக்
விட்டுப்புகழும்படியன்றோ இப்போதும் வ
நவநபரனைக்கொண்டு அடியேன் வர்த்திக்கிற
து. (யதீந்த்ர) ரோமநிவர்த்தகனான ஶிக்ஷைப்ப
ரியிருக்கச்செய்தேயும் கோயின்கையிலே துகை
ண்ணும் வ்யாதிக்ரஸ்தனைப்போலே, ஆஶ்ரித
தோஷங்களைக்கழிக்கைக்கு ஶக்தரானதேவரை
பற்றியிருக்கிற வடியேன் இத்தோஷ ஸாகரத்தி
லகிடந்தழுந்துகை ப்ராப்தமோபிரானே ! என்
றார். ... ... ... எ.

దుఃఖావహోఽహమనిశంతవదుష్టచేష్ట
శ్శబ్దాదిభోగనిరతశ్శరణాగతాఖ్యః ।
త్వత్పాదభక్తఇవశిష్టజనౌఘమధ్యే
మిథ్యాచరామియతిరాజతతోఽస్మిమూర్ఖః ॥౮ ॥

(து³ர்வாவஹோஹமித்யாதி³) (அஹம்-தவ-அங்ஙிஸம் - து³ர்வாவஹோப⁴வாமி)தே³வர்திருவடிகளில் ஶேஷத்வமே நிரூபகமாம்படியான ஸ்வரூபத்தையுடையநான் இவ்வாத்மாவுக்கு வகுத்த ஶேஷியான தே³வரீருக்கு இடைவிடாமல் ஹர்ஷாவஹனாய்ப்போரவேண்டியிருக்க, அதுஶய்யாதவளவன்றிக்கே,தத்³விருத்³த⁴மாகது³ர்வாவஹனாய்க்கொண்டு போராநின்றேன். இதென்னுடையப்ரத²மபதா³ர்த²நிஷ்டையிருந்தபடி. (து³ஷ்டசேஷ்ட:) த³யாதி³கு³ணபூர்ணரும் ஏறிட்டுப்பார்க்க வருவருக்கும்படி து³ர்வ்ருத்தியேயாய்த்துச்செய்துபோருவது. (ஶப்³தா³தி³போ⁴கநிரத:) தே³வரீர்திருவடிகளில் கைங்கர்யத்துக்கு இட்டுப்பிறந்துவைத்து, அதுக்குவிருத்³த⁴மான ஶப்³தா³தி³விஷயாநுப⁴வத்திலே ஒருஸர்வஶக்தியாலும் விடுவிக்கவொண்ணாதபடி மிகவும் ப்ரவணநாய்ப்போருமவன். ( ஶரணாக³தாபஸ: ) ஶரணாக³தனென்கிற பேர்மாத்ரமேயுள்ளது. அதிலும் நிஷ்டையில்லையென்கை;இத்தால் - மத்⁴யமபதா³ர்த²நிஷ்டாஹாநி சொல்லுகிறது.(ஶப்³தா³தி³போ⁴கநிரத:) என்கையாலே-த்ருதீயபதா³ர்த²நிஷ்டையில்லையென்னுமிடம்ஶொல்லிற்று;இதரவிஷயப்ரவணனாய் து³ஷ்டசேஷ்டனாகையாலே இவனைக் கைக்கொள்ளப்போகிறதில்லை, ஶரணாக³தனென்றும் பேரிட்டிருக்கையாலே கைவிடப்போகிறதில்லை. இப்படி தள்ளவும் கொள்ளவும் போகாதேயிருக்கிறவிவனை நாமென்செய்வதென்று புண்படும்படியி

ருக்கையாலேஶித்யஜீவாவஹனென்கை. (த்வத்பாதபக்தஇவஶிஷ்டஜநௌகமத்ய இத்யாதி) நம்படியிதுவானால் நமக்கு மிவ்விஷயத்துக்குமென்னஶேர்த்தியுண்டு என்று நடுங்கிக்கடக்கவர்த்திக்கவேண்டியிருக்க, அதுசெய்யாதே, தேவரீர் திருவடிகளில் பாரமார்த்திகப்ரேமயுக்தரான விலக்ஷணர் திரளுக்குள்ளே நானுமொருவனாகப்புக்கு, ப்ரேமலேஶமற்றிருக்க, தேவரீர்திருவடிகளில் ப்ரேமபரிபூர்ணரைப்போலே க்ருத்ரிமமாக வரியாநின்றேன். (ததோஸ்மிமூர்க்க:) நிஸ்நேஹிதனாயிருக்கச்செய்தே ஸ்நேஹயுக்தரைப்போலே அநுகூலகைங்கர்யங்களை ஆசைப்படுவதுஅர்த்திப்பதாய்க்கொண்டுக்ருத்ரிமமாகவர்த்தியாநின்றேனென்பது யாதொன்றாலே, அத்தாலேமூர்க்கனாகாநின்றேனென்கிறார். ... அ.

నిత్యంత్వహంపరిభవామిగురుంచమన్త్రం
తద్దేవతామపినకిఞ్చిదహోబిభేమి ।
ఇత్థంశఠోఽప్యశఠవద్భవదీయసఙ్ఘే
హృష్టశ్చరామియతిరాజతతోఽస్మిమూర్ఖః ॥౯॥

(நித்யம்த்வஹமித்யாதி) (நித்யம்த்வஹம்பரிபவாமிகுரும்) அஹேதுகமாகவங்கீகரித்துஸ்வோபதேஶத்தாலேதத்வஜ்ஞாநத்தைப்பிறப்பித்து ஸ்வரூபயாதாத்ம்யப்ரகாஶகமான திருமந்த்ரத்தையும் ஸார்த்தமாகப்ரஸாதித்தருளி ஸ்வரூபவிருத்தங்கள் புகுராதபடி இரவுபகல் அவஹித

னுய்நோக்கிக்கொண்டுபோரும் ஆசார்யனருளிச் செய்தபடி அநுஷ்டியாமையாலும், தத்ப்ரதிஷ்ட மந்த்ரதாத்பர்யங்களை அநதிகாரிகளுக்கு உபதேசிக்கையாலும், ஸர்வகாலமும் ப்ரதிக்ஷணம் பரிஹஸியாநின்றேன். அவ்வளவன்றிக்கே, (மந்த்ரஞ்ச பரிஹஸாமி) அநுஸந்தாத்ருக்களுக்கு ரக்ஷகமாகையாலே மந்த்ரஸம்ஜ்ஞமாய் ஸகலவேதாந்தஸாரமான திருவஷ்டாக்ஷரத்தையும், ஆசார்யன் அநுக்ரஹித்தருளிச்செய்த யதார்த்தத்தையும் மறக்கையாலும், அயதார்த்தத்தை அநுக்கார்யமாக நினைக்கையாலும், அதின் சீர்மைக்குச் சேரும்படி பரிஹஸியாநின்றேன். அவ்வளவன்றிக்கே, (தத் தேவதாமபி-நித்யம்-பரிஹஸாமி) அம்மந்த்ரத்துக்கு சேஷித்வசரண்யத்வ ப்ராப்யத்வ வேஷத்தாலே ப்ரதிபாத்யனான எம்பெருமானையும், தத்ஸமாச்ரயணத்தைப்பற்றஸ்ருஷ்டங்களான கரணத்ரயத்தையும் தத்விஷயத்தில் ப்ரவணமாக்காமையாலும் ததிதரவிஷயங்களிலே ப்ரவணமாக்குகையாலும் பரிஹஸியாநின்றேன். (நகிஞ்சித் விஹோராவிஹேமி) எப்போதும் உத்தேச்யமாகவநுஸந்தித்து கௌரவிக்கத்தக்கதான ருமந்த்ரதேவதைகளை அநவரதம்பரிஹஸித்து இதுவேயாத்ரையாய்ப்போராநின்றால், இதிலேயொருமாற்றும் ஹயமின்றிக்கேயிராநின்றேன். (இத்யம்ஸயோபி) மேலெழுவன்றிக்கே உள்ளூற ஆராய்ந்துபார்த்தால் ஸம்சயிருக்கச்செய்தேயும். (அஸம்வத்ஸவதீய ஸங்கேதஸ்ருஷ்டஸ்வராமி) ஆசார்யவிஷயத்திலும்

அவனுபகரித்த மந்த்ரவிஷயத்திலும் தத்ப்ரதிபாத்யமான தேவதாவிஷயத்திலும் உக்தக்ரமந்தப்பாமல் யதாப்ரதிபத்தியோடே வர்த்திக்குமவர்களாய் தேவரீருடைய திருவடிகளில் ஸம்பந்தத்தையிட்டே நிரூபிக்கப்படுமவர்களான மஹாத்மாக்கள் நடுவே, "குருமந்த்ரதேவதைகளளவிலிவனத்தனை ப்ரேமாதிஶயமுடையவர்களில்லை" என்றுதோற்றும்படி நிரதிஶயஹர்ஷயுக்தனாய்க்கொண்டு, ஹர்ஷத்துக்குப்போக்குவிட்டு இதஸ்த்ததஃ ஸஞ்சரியாநின்றேன். (ததஃ—மூர்கோஸ்மி) இப்படி குருமந்த்ராதிகளை பரிஶீலித்து, அதிலொருஸம்ஶயமின்றிக்கே விலக்ஷணர் நடுவே புக்கு, "நானுமவர்களிலேயொருவன்" என்று கண்டவர்களுக்குத்தோற்றும்படி மஸக்குப்பரவிட்டுக் களித்துத்திரியாநின்றேன் என்பதுயாதொன்றுண்டோ, அத்தாலே என்னத்தனை மூர்கரில்லையென்கிறார்.

హాహన్త హన్త మనసా క్రియయా చ వాచా
యోహం చరామి సతతం త్రివిధాపచారాన్ ।
సోహం తవాప్రియకరః ప్రియకృద్వదేవం
కాలం నయామి యతిరాజ తతోస్మి మూర్ఖః ॥ ౧౦॥

(ஹாஹந்தஹந்தேத்யாதி) பகவத்பாகவதாசார்யவிஷயங்களை யநுவர்த்திக்கைக்குண்டான மநோவாக்காயரூபகரணத்ரயத்தையுங்கொண்டு அவ்விஷயங்களை பரிஶீலித்து, அதிலொருஸம்ஶயமின்றிக்கே விலக்ஷணர் நடுவே அநுவர்த்தியாதமாத்ரமன்றிக்கே, அநவரதமபசாரமே பண்ணி

க்கொண்டு போருகையாலுண்டான வ்யஸநாதிஶயத்தாலே யருளிச்செய்கிறார் (ஹாஹந்தஹந்த) என்று. (மநஸா) ஸமஸ்தவைஷயிகங்களையநுஸந்திக்கக்கண்ட மநஸ்ஸுபடும்பாடே!. (க்ரியயாவ) க்ரியாஶப்தத்தாலே-க்ரியாஹேதுவான காயத்தைலக்ஷிக்கிறது; (வாசா) உத்தேஶ்யங்களைக்குறித்து அஞ்ஜலிப்ரணாமாத்யநுகூலவ்ருத்திபண்ணுகைக்கும்தத்குணங்களைப்புகழுகைக்குமாகக்கண்ட காயமும் வாக்கும், அபசாரம்பண்ணி அநர்த்தப்படுகைக்குறுப்பாவதே!. (ஸததம்) ஸ்வரூபாநுரூபமான வ்ருத்தியிலே அந்வயித்தவனுக்குகாலவிஶேஷத்திலே விச்சேதம்வருகை அஸஹ்யமாறுப்போலேயாய்த்து அந்தபசாரகரணத்திலும் காலவிஶேஷத்திலுண்டானவிச்சேதம் அஸஹ்யமானபடி. (வாமி)என்கிறவர்த்தமாநநிர்தேஶத்தாலே – ஸர்வாவஸ்தையிலுமபசாரமநுவர்த்திக்கிறபடி. (த்ரிவியாபசாரான்) ஓரொருவிஷயத்திலபசாரமே அதிக்ரூரமாயிருக்க, மூன்று அபசாரத்திலும் அந்வயித்தபடி. அதுதான்கதிபயாபசாரத்திலேஶவறுகையன்றிக்கே நாநாவிதாபசாரங்களிலு மந்வயித்தபடியைப்பற்ற பஹுவசநப்ரயோகம்பண்ணுகிறது. *அஹம் ஸர்வம்கரிஷ்யாமிக்கு எதிர்த்தட்டிருக்கிறபடி. (ஸோஹம்) அபராயம்பண்ணினகையுலராதவிந்தபாபிஷ்டன். (தவாப்ரியகர:) "ஸ்வரூபாநுரூபமான வ்ருத்தியிலேயந்வயித்து வாழவேணும்" என்று இதுக்கு க்ருஷிபண்ணிக்கொண்டுபோருகிற தேவரீருக்கு, பண்ணின க்ருஷி

யைப்பாழாக்கி அநிஷ்டகரனாய்ப் போருமவன். (ப்ரியக்ருத்வத்) அர்யஸ்திதி இதுவாயிருக்க, “பகவத்பாகவதாசார்யவிஷயங்களி லிவனைத்தனைப்ரேமமுடையாரும் கைங்கர்யருசியுடையாருமில்லை, ஆனபின்பு இவனேநமக்கு ப்ரியகரன்” என்று தேவரீரும் நினைக்கும்படியாய்த்து வர்த்திப்பது. (ஏவம்காலம்நயாமி) இப்படிக்ருத்ரிமமானபரிமாற்றத்தால்காலத்தைக்கழியாநின்றேன் (யதிராஜ ததோஸ்மி மூர்க:) ரக்ஷணஸாமர்த்யமுடைய தேவரீரும் ஸந்நிஹிதராயிருக்க இவ்வஸ்து அபசாரத்திலே கைகழிகையாலே என்னைத்தனை மூர்கரில்லையென்கிறார். ... க0.

శాపేక్ష్యతే యదిభవన్తి భయానుతాప
లజ్జాః పునః కరణమస్య కథం ఘటేత।
మోహేన మేన భవతీహ భయాదిలేశ
స్తస్మాత్పునః పునరఘం యతిరాజకుర్వే ॥౧౧॥

இப்படி அக்ருத்யகரண பகவதபசாராதிகளிலே அந்விதனாயிருக்கச்செய்தேயும் அவற்றி லந்வயியாதவனைப் போலேயும் வர்த்திக்கையாலே என்னில் குறைந்தாரொருவருமில்லையென்று விஷண்ணரான விவரைப்பார்த்து, எம்பெருமானார் “அநுதாபாதிகளுண்டாகில் அவைதன்னடையே கழியுங்காணும்” என்றருளிச்செய்ய; “அநுதாபாதிலே ஶமுமில்லாமையாலே இப்போதும்அக்ருத்யகரணமேயெனக்குநித்யாநுஷ்டாநமாய்ச்சொல்லாநின்றது” என்று விண்ணப் பஞ்செய்கிறார்.

(பாபேக்ருத இத்யாதி) பயமாவது-மேல்வரக்கடவ அநர்த்தவிஶேஷங்களுக்கு ஸூசகமான விக்நங்களைக்கண்டு பிறக்குமதன்றோ துஃவெம் ; "இப்போதிதைச்செய்தால் மேல் நமக்கு அநர்த்தம்வரும்" என்று வெருவுமவனுக்கு அப்படிப்பட்ட பயமுண்டாம் ; " நாம் அக்ருத்யத்திலங்வயிக்கக்கடவோமல்லோம்" என்று அபிஸந்திவிராமம் பிறந்திருக்கச்செய்தேயும் துர்வாஸனையாலே நெஞ்சுகலங்கி நினைவற அக்ருத்யத்திலே யிறங்கினவனுக்கு அநுதாபமுண்டாம் ; ஸாக்ஷிபூர்வம் ப்ரவர்த்தியா நிற்கச்செய்தேயும் ஶிஷ்டகர்ஹைக்கு அஞ்ஜினவனுக்கு லஜ்ஜையுண்டாம் ; இவற்றிலே தேனுமொன்றுண்டாய்த்ததாகில் மீளவும் பாபத்தைச் செய்கையெங்ஙனேகூடும்படி?. (மோஹேநமேநஸவதீஹபயாதிலேஶ:) மேல்வருமநர்த்தத்தையாதல் இப்போதுண்டான ஶிஷ்டகர்ஹையையாதல் ஒன்றையும் நிரூபிக்கவறியாத வஜ்ஞாநத்தாலே ஸாக்ஷிபூர்வகமாக அக்ருத்யாதிகளிலே மண்டிப்போருகிற வெனக்கு ஏகதேஶமும் பயாதிகளுண்டானதில்லை. (தஸ்மாதித்யாதி) ஆகையால், அடுத்தடுத்து பாபமேசெய்யாநின்றேன். ... கக.

అన్తర్బహిస్సకలవస్తుషు సన్తమీశ
మన్ధఃపురస్థితమివాహమవీక్షమాణః।
కన్దర్పవశ్యహృదయస్సతతంభవామి
హన్తత్వదగ్రగమనస్యయతీన్ద్రనార్హః ॥౧౨॥

"ஸர்வேஶ்வரன் ஸகலவஸ்துக்களிலு மந்தர்யாமியாய் ஸமஸ்தப்ரவ்ருத்திகளேயும் பார்த்துக் கொண் டெழுந்தருளியிருக்கிறபடியை யநுஸந்தித்தாய் பாபகரணத்துக்கிடமில்லேகாணும்"என்ன; அதுவுமநுஸந்திக்கைக்கு யோக்யதையில்லாதபடி காமபரவஶாந்த:கரணனு யிருக்கிறே னென்கிருர்.

(அந்தர்பஹிரித்யாதி) ஸ்வபரவிஶாமமற ஸகலவஸ்துக்களிலும் உள்ளோடு புறம்பொடு வாசியற வ்யாபித்திருக்குமவனுய், வ்யாப்யவஸ்துக்களே ஸ்வாதீநமாகநியமித்துக்கொண்டுபோருமவனே. உள்ளேயிருக்கிறபடியையறிந்தால் "நினேவுக்குவாய்த்தலேயான நெஞ்ஜிலிருக்கிறவன்என்னினேந்திருக்கும்!" என்றுவெருவி நெஞ்ஜால் பாபசிந்தைபண்ணப்போகாது; புறம்பிருக்கிறபடியையநுஸந்தித்தால்"உள்ளேயன்ருே அவன், புறம்பில்லே" என்று பாஹ்யகரணங்கள் கொண்டு பாபம்செய்யப்போகாது; உள்ளும் புறம்புமுளனு யிருந்தாலும், செய்தபாபத்துக்கு உசிதத‌ண்டம்பண்ணி நியமிக்கைக்கு ஶக்தனல்லவாகில் பாபம்செய்யலுமாம்; அங்ஙனன்றிக்கே, அபராதாநுகுணம்தண்டிக்கைக்கு உரியநிரங்குஶஸ்வதந்த்ரனுமா யிருந்தாலெங்ஙனே பாபம் செய்யலாவது? (அந்யதா:புரஸ்ஸ்திதமிவாஹமவீக்ஷமாண:)ஜாத்யந்தன் தன்னுடைய முன்னேநி

ந்கிறவனைக் காணமாட்டாதாப்போலே, தத்வஜ்ஞாநஶூந்யனான நான், ஸர்வத்ர ஸந்நிஹிதனாய் ஸர்வநியந்தாவானவனைக் காணமாட்டுகிறிலேன்.

ஆசார்யோபதேஶாதி லப்யஜ்ஞாநமுண்டாயிருக்ககாணமாட்டாமைக்கு ஹேது வென்னென்ன அருளிச்செய்கிறார் (கந்தர்பவஶ்யேத்யாதி) அவனைக்காண்கைக்கு ஸாதநமான நெஞ்சு காமபாரவஶ்யத்தாலே கலங்கினபின்பு காணவிரகுண்டோ விஷயப்ரவணமானநெஞ்ஜிலே ஆசார்யோபதேஶாதிலப்யமான ஜ்ஞாநத்தைப்ரதிஷ்டிப்பிக்கை அரிதிறே. (ஸததம்) மநஸ்ஸுக்கு காமபாரவஶ்யம் காதாசித்கமாய்த்தாகில் அல்லாதகாலங்களிலேயாகிலும் பகவதநுஸந்தாநம்பண்ணலாம் ; ஸர்வகாலங்களிலும்* சித்தம் காமகலுஷமானால் எங்ஙனேயநுஸந்திக்கும்படி. (ஹாமி) என்கிறவர்த்தமாநநிர்தேஶத்தாலே- காலகலேகதேஶமும்காமபாரவஶ்யம்தவிர்ந்ததில்லையென்கிறது. க்ஷணகாலமாகிலும் வாஸுதேவசிந்தநத்துக்கு யோக்யமாகாதபடி பாழேபோவதே ! என்கிறவிஷாதத்தாலே (ஹந்த) என்கிறார். (த்வதங்ப்ரமமநஸ்யதீந்த்ரநார்ஹ:) ஸாக்ஷாத்க்ருதஸகலதத்த்வராய் நிரஸ்தஸமஸ்தகாமரானவர்கள் கிட்டி ஸேவிக்கும்படியானவைபவத்தையுடைய தேவரீர்திருமுன்பேவருகைக்கு, இப்படியிருக்கிறநான் அர்ஹனோ என்று தம்மை நிந்தித்துக்கொண்டருளுகிறார். ... ... ... ௧௨.

తాపత్రయీజనితదుఃఖనిపాతినోఽపి
దేహస్థితౌ మమ రుచిస్తు న తన్నివృత్తౌ ।
ఏతస్యకారణమహో మమ పాపమేవ
నాథ త్వమేవ హర తద్యతిరాజ శీఘ్రమ్ ॥ ౧౩ ॥

"இப்படிபாபார்ஜநபூமியுமாய் தத்பலமான துக்காநுபவத்துக்கும் ஸ்தாநமான ஶரீரத்திலிருப்பைத் தவிர்த்துக்கொள்ளமாட்டீரோ" என்று எம்பெருமானார்க்குத் திருவுள்ளமாக; என்னுடைய பாபாதிஶயத்தாலே ஶரீரநிவ்ருத்தியிலபேக்ஷைபிறக்கிறதில்லை, தாத்ருஶபாபத்தை தேவரீர்தாமே ஶீக்ரமாகப் போக்கியருளவேணுமென்கிறார்.

(தாபத்ரயீத்யாதி) இதிலநுபவிக்கிற துக்கங்கள் ஒன்றிரண்டாய் அத்தைக்கழித்துக்கொள்ளாதொழிகிறதோ; கர்மம் ஏகவிதமாகிலிறே தத்பலமான துக்கமும் ஏகவிதமாயிருப்பது; கர்மாநுகுணமாக அநுபாவ்யமான துக்கமும், ஆத்யாத்மிகாதிரூபேண த்ரிவிதமாயிருக்கும். இதில், ஆத்யாத்மிகங்கள்-ஶாரீரமென்றும் மாநஸமென்றும் இரண்டுவகை; ஶாரீரங்கள்-ஜ்வராதிவ்யாதிகளாலே அநேகவிதமாயிருக்கும்; மாநஸமாவது-காமக்ரோதாதிகளாலே வருகிற வ்யஸநம். ஆதிபௌதிகமாவது-ம்ருகபக்ஷ்யாதிகளால் வருகிற வ்யஸநம். ஆதிதைவிகமாவது-ஶீதோஷ்ணாதிகளால் வருகிற வ்யஸநம். இப்படி மூன்றுவகைப்பட்ட தாபமூன்றும்

களாலேயுண்டான து:கவஸாகரத்திலே உத்தரோத்தரம் அவகாஹியாநிற்கக்கடவேனோ. (தேஹஸ்யதௌமமருக:) "து:கம்மாஸுவம்" என்கிற லௌகிகர்படியும் கடந்திருக்கிற வெனக்கு, து:காஸ்பதமான ஶரீரத்தைக்குறைவறநோக்கிக் கொள்ளுகையிலேயாய்த்து இப்போதுருசி. (து) லௌகிகர்படியில் தமக்குண்டானவிஶேஷம்.(நக நிவ்ருத்தௌ) அந்த ருசி இதினுடையநிவ்ருத்தியிலும் ஒருக்காலுண்டாய்த்ததாகில் இத்தைவிடுவித்துக்கொள்ளலாய்த்துக்கிடீர் !. (ஏதஸ்யேத்யாதி) இதுக்குக்காரணமும் நான்பண்ணினபாபமேயித்தனை, ஐயோ!. (நாய) இது அநாயவஸ்துவாய்த்தானிங்ஙனே யெளிவரவுபடுகிறதோ. (த்வமேவேத்யாதி) இஸ்ஸம்பந்தத்தைப் பார்த்து, "து:கத்தையும் ஸுகமாகவிரும்புகிறவிவன்மேன்மேலும்அநர்த்தத்தைவிளைத்துக்கொள்ளும்" என்று ஶடக்கென அந்தபாபத்தைப் போக்கியருளவேணும். ... ... ௩௩.

వాచామగోచరమహాగుణదేశికాగ్ర్య
కూరాధినాథకథితాఖిలనైచ్యపాత్రమ్ ।
ఏషో౽హమేవనపునర్జగతీదృశస్త
దా రామానుజార్యకరుణైవతుమద్గతిస్తే ॥౧౪॥

" இப்போதும் ஜயாநுதாபாதிகளுமற்று பாபார்ஜநத்திநின்றும் மீளாதபடியையுடையனுய்ஶரீ

ரநிவ்ருத்தியிலு மபேக்ஷையின்றிக்கேயிருக்கிறவும க்கு நம்மாலே தத்யேதுவான பாபங்களைப்போ க்கவென்றால் போக்கப்போமோ, ஆனபின்பு நீர்தாமே உம்முடையரக்ஷணத்துக்கு ஒருவழிபார் க்கவேணுங்காணும்" என்ன ; தோஷமே வேஷ மானவெனக்கு தேவரீர்க்ருபையொழிய வேறும தியில்லையென்கிறார் மேலிரண்டுஶ்லோகத்தாலே.

அதில், முதல்ஶ்லோகத்தாலே - ஸர்வஜ்ஞரான கூரத்தாழ்வான் வரதராஜஸ்தவாதிகளிலருளிச் செய்த தோஷங்களுக்கெல்லாம் ஏகாஶ்ரயமான அடியேனுக்கு தேவரீர் க்ருபையொழியவேறுக தியில்லையென்கிறார்.

(வாசாமகோசரேத்யாதி) "மொழியைக்க டக்கும் பெரும்புகழான்" என்கிறபடியே - இவ் வளவென்று வாக்கால் பரிச்சேதிக்கவெண்ணாத படி யிருப்பதாய் நிஸ்ஸீமமான ஜ்ஞாநஶக்த்யா திகல்யாணகுணங்களையுடையராய், தன்திறத்திலே தீரக்கழியவபசாரம்பண்ணின நாலூரானையும்பெ ருமாளோடொருதலையாகமன்றாடி ரக்ஷிக்கும் பரம க்ருபாவானகையாலே ஆசார்யஶ்ரேஷ்டருமாயுள் ளகூரத்தாழ்வானருளிச்செய்த அந்தைந்யத்துக் கும்பாத்ரம்,கீழ்ச்சொன்ன ஸ்வபாவத்தையுடை யனானொருவனுமேயாயிருக்கும்.(நபுநர்ஜநதீ த்ருஶ:) ஆராய்ந்துபார்த்தால் இஜ்ஜந்மத்திலேஇப் படிப்பட்டதோஷத்தையுடையானொருவனுமில்லை. (தத்ராமாநுஜேத்யாதி) தேவரீர்க்ருபைக்குவயிறு

நிறையும்படிக்கிடான தோஷபூர்த்தியெனக்கு உண்டாகையாலே, தேவரீர்க்ருபையேயெனக்குப்புகல். (ஆர்ய) இவ்வர்த்தம்தேவரீரறியாமல் அடியேன் விண்ணப்பம்செய்யவேணுமோ, மோக்ஷைகஹேதுவான சாதுர்யத்தையுடைய சதுரக்ஷரியான திருநாமமே போராதோ. "நவேத்ராமாநுஜேத்யேஷா சதுரா சதுரக்ஷரீ" என்னக்கடவதிறே. ௧௪.

శుద్ధాత్మయామునగురూత్తమకూరనాథ
భట్టాఖ్యదేశికవరోక్తసమస్తనైచ్యమ్।
అద్యాస్త్యసంకుచితమేవమయీహలోకే
తస్మాద్యతీన్ద్రకరుణైవతుమద్గతిస్తే॥ ౧౫॥

இவ்வளவன்றிக்கே, பரமாசார்யரான ஆளவந்தாரும் கூரத்தாழ்வானும் அவருடையதிருமகனாரானபட்டரும் தாங்தாமருளிச்செய்தப்ரபந்தங்களில் ப்ரதிபாதித்த தோஷங்களடைய எனக்கொருவனுக்குமேயுண்டானபின்பு தேவரீர்க்ருபையே யெனக்கு உபாயமென்கிறார். தோஷம் கனக்கக்கனக்க எம்பெருமானார் க்ருபை தம்மளவிலே முழுமடைகொள்ளுமென்றிருக்கிறார்.

(ஶுத்தாத்மேத்யாதி) பரிஶுத்தாந்தக்கரணரான ஆளவந்தார், ஆசார்யோத்தமரான கூரத்தாழ்வான், அவர் திருமகனாரானபட்டர், இவர்கள் ஸ்வஸ்வப்ரபந்தங்களில் "அமர்யாத:" "ஶுசிவாசநோசு" "அதிக்ராமந்நாஜ்ஞாம்"

இத்யாதிகளாலே அருளிச்செய்தவெல்லாநைச்யமும். (அத்யாஸ்தித்யாதி) இந்த லோகத்தில் இக்காலத்திலே நானொருவன்பக்கலிலுமே ஸாருக்கமறவுண்டாகாநின்றது என்பது யாதொன்று ; ஆகையாலே, தேவரீர்க்ருபையேயெனக்குஜ்ஜீவநோபாயம். (இஹலோகே) லோகாந்தரத்திலுண்டாகில் தெரியாது. (அத்ய) காலாந்தரத்திலுண்டாகில் தெரியாது. (அஸங்குசிதம்) உண்டாய்த்தாகிலும் இப்படிகுறைவறவுண்டாகக்கூடாது ; ஆகையால், இங்ஙனொத்தவிஷயம் தேவரீர்க்ருபைக்கு வேறில்லை ; அடியேனுக்கு தேவரீர்க்ருபையொழிய வேறுபுகலில்லையென்றபடி. இத்தால் – "நிகரின்றிநின்றவென்னீசைக்குநின்னருளின்கணன்றிப் புகலொன்றுமில்லையருட்குமஃதேபுகல்" என்றத்தைச்சொன்னபடி. ... ... ... ௧௫.

శబ్దాదిభోగవిషయారుచిరస్మదీయా
నష్టాభవత్విహభవద్దయయాయతీన్ద్ర।
త్వద్దాసదాసగణనాచరమావధౌయ
స్తద్దాసతైకరసతాఽవిరతామమాస్తు॥౧౬॥

இப்படி தோஷபாஹுள்யத்தையும் தோஷஸஹிஷ்ணுவானதமக்கு உஜ்ஜீவநோபாயம்எம்பெருமானார் க்ருபையேயென்னுமதத்தையும் இவரருளிச்செய்தவாறே, எம்பெருமானார் இவரைவிசேஷகடாக்ஷம்பண்ணியருளி "உமக்கு அபேக்ஷிதமென்" என்று கேட்டருள ; "வாவா

யதீந்த்ர" என்றும் "அல்பாபிமேந" என்றும் கீழ் இரண்டுஶ்லோகத்தாலும் ப்ரார்த்தித்த அநிஷ்டநிவ்ருத்தியையும் இஷ்டப்ராப்தியையும் இஶ்லோகத்தில் பூர்வோத்தரார்த்தங்களாலே ப்ரார்த்திக்கருளுகிறார்.

(ஶப்தாதிபோகே) த்ருதீயபதத்திற்சொன்ன அநந்யஸாத்யத்வத்துக்கு ஶப்தாதிபோகருசி விரோதி, ஆகையாலே அவித்யாநிவ்ருத்தியையபேக்ஷியாமல் விஷயப்ராவண்ய நிவ்ருத்தியையபேக்ஷிக்கிறார். (அஸ்மதீயா) இந்தருசியாலேயன்றோ அநாதிகாலம் ஸ்வரூபாநுரூப புருஷார்த்தத்தையிழந்ததென்று அதின்பேர் சொல்லவும் அஸஹ்யமாயிருக்கிறதாய்த்து. (நஷ்டாஸ்து) "யாதுஶதயாவிநாஶநம்" என்னுமாப்போலே உருக்காணவொண்ணாதபடி நஶிக்கவேணும். தேஹாவஸாநத்திலே தன்னடையே நஶியாதோவென்ன (இஹ-நஷ்டாஸ்து) என்கிறார். இஶ்ஶரீரத்தோடேயிருக்கிற காலத்திலே நஶிக்கவேணும்; அன்றிக்கே, பேரளவுடையவர்களையும் தன்கீழேயாக்கி ஶப்தாதிகள் தனிக்கோல்செலுத்துகிற விவிஸூதியிலே யென்னவுமாம். அநாதிகாலமேபிடித்துக் கரம்பேறிக்கிடக்கிறவிது நஶிக்கும்போதைக்கொருஹேது வேண்டாவோவென்ன அருளிச்செய்கிறார் (ஸவத்தயா) என்று. "நமக்கு ஶேஷமாய்வைத்து இவ்வஸ்து இவ்விஷயங்களின் காலிலேதுகையுண்பதே!, இதின்கையில் இனியிவன்நலிவுபடா

தொழிவான்'' என்று தேவரீர்க்ருபைபண்ணில் பிழைக்கலாமித்தனை. க்ருபாமாத்ரங் கொண்டு விஷயருசியைத்தவிர்க்கப்போமோவென்னஅருளிச்செய்கிறார் (யதீந்த்ர) என்று. விஷயங்களை திரஸ்கரிக்கும் ஶக்திமான்களான யதிகளுக்குத்தலைவரான தேவரீர்கு முடியாததுண்டோ. ''இவ்வளவோ, மற்றுமபேக்ஷிதமுண்டோ'' என்ன; ''இது ஆநுஷங்கிகம், ப்ராப்யாஂஶமொலம்வேறே'' என்று தமக்கிஷ்டமான புருஷார்த்தையபேக்ஷிக்கிறார் (த்வத்தாஸேத்யாதி) தேவரீர்திருவடிகளில் ஶேஷத்வமே நிரூபகமாகவுடைய ஶேஷபூதருடைய பரம்பரையினெல்லைநிலத்திலே நிற்கிறவர்கள்யாவரொருவர், அவர்திருவடிகளில் ஶேஷத்வமொன்றிலு மொருபடிப்பட்ட ரஸத்தையுடையவுருகையே இடைவிடாமலெனக்கு நடக்கவேணும். (மமாஸ்து) ''இதுவேபுருஷார்த்தம்'' என்றறுதியிட்டிருக்கிற வெனக்கு இதுண்டாவதாக. இந்தபுருஷார்த்தில் ருசியில்லாதாரிழந்தார்கள் என்று ருசியுடையவெனக்கு மிழக்கவேணுமோ. ... ... ... ௧௬.

శ్రుత్యగ్ర వేద్యనిజదివ్యగుణస్వరూపః
ప్రత్యక్షతాముపగతస్త్విహ రఙ్గరాజః ।
వశ్యస్సదా భవతి తే యతిరాజ తస్మా
చ్ఛక్తస్స్వకీయజనపాపవిమోచనే త్వమ్ ॥౧౭॥

"இஷ்டங்களைக்கொடுக்கையும் அநிஷ்டங்களைப்போக்குகையும் உபாயபூதனான ஈஶ்வரன்க்ருத்யமன்றோ, நம்மாலதுசெய்து தலைக்கட்டப்போமோ" என்ன; * பல்லுயிர்க்கும்-வீடளிப்பான்-விண்ணின்தலைநின்று-மண்ணின்தலத்துதித்து * ஸ்ரீவிஷ்ணுலோக மணிமண்டபமார்க்கதாயியாயிருக்கிறதேவரீர்க்குமுடியாததுண்டோ, ஆகிலும் அவதாரத்தில் மெய்ப்பாட்டுக்காக ஸர்வேஶ்வரன்றலையிலே ஏறிட்டருளினீராகிலும் அந்த ஈஶ்வரன்றான் தேவரீர்க்கு வஶ்யனன்றோ, ஆனபின்பு, ஆஶ்ரிதபாபவிமோசநத்தில் ஶக்தி தேவரீருக்கேயுள்ளதென்கிறார்.

(ஶ்ருத்யந்தவேத்யேத்யாதி) அபௌருஷேயமாய் நித்யநிர்தோஷமான வேதாந்தத்தாலே வேத்யமானதன்னுடைய கல்யாணகுணவிஶிஷ்டமான திவ்யாத்மஸ்வரூபத்தையுடையவன்; ஸ்வரூபகுணங்களையுடையவன். ஸ்வரூபகுணங்களைச்சொன்னவிது, ரூபவிபவாதிகளுக்கு முபலக்ஷணம். (திவ்யகுணஸ்வரூபः) என்று -கல்யாணகுணவிஶிஷ்டமாக ஸ்வரூபத்தைச்சொல்லுகிறது. வஸ்துநிர்குணமென்பார்க்கு நாவெடுக்கவிடமறும்படியாக "நலமுடையவன்" என்னுமாப்போலே, "நிர்குணம்" "நிரஞ்ஜநம்" இத்யாதிகளில் தோற்றுகிற குணஸாமாந்யநிஷேதம் "யஸ்ஸர்வஜ்ஞஸ்ஸர்வவித்" இத்யாதிகளில்விதிக்கப்பட்டகல்யாணகுண வ்யதிரிக்தஹேயகுணவிஷயமென்று தோற்றுகைக்காக (திவ்யகு-

ணஸ்வரூப:) என்கிறார். இத்தால் அவனுடைய பரத்வம்சொல்லிற்று. இப்படியென்றும் ஶாஸ்தரங்களிலே கேட்டுப்போகையன்றிக்கே கண்ணாலேகண்டு எல்லார்க்குமநுபவிக்கலாம்படி கோயிலிலேவந்து கண்வளர்ந்தருளின ஸௌலப்யத்தைச்சொல்லுகிறது (ப்ரத்யக்ஷதாமுபகத:) *என்றேனும்கட்கண்ணால்காணாததன்வடிவைக்கண்ணுக்குவிஷயமாக்கினபடி."ஞாலத்தாரோடேநடந்தும்நின்றும்" என்பாரைப்போலே தன்வடிவில் வாஸியறிந்து ஈடுபடுவாரில்லாத ஸம்ஸாரத்திலேகிடீர் தன்வடிவைப்ரத்யக்ஷிப்பித்தது!. (ரங்கராஜ:) விஸஜ்ருஶமான தேஶத்திலேவந்தால்தன்வைபவம் குன்றுகையன்றிக்கே துடித்தபடி. பரமஸாம்யாபன்னர்க்கு முகங்கொடுத்துக்கொண்டிருக்கிறவிருப்பிலும் இங்கேவந்த ஈராஸ்ததவிர்தபின்பாய்த்து ஶேஷித்வம்நிலைநின்றது. (வஶ்யஸ்ஸதாஸவதிதேயதிராஜ) இப்படிமேன்மைநீர்மை இரண்டாலும் பூர்ணரான பெரியபெருமாள் தேவரீர்க்கு எப்போதும் வஶ்யரன்றோ "நம்சேவகனார் மருவியபெரியகோயில்" என்கிறபடியே — ஆஶ்ரிதர்க்குக் கையிலக்கைக்குச்சேவிக்குமவனன்றோ உபயவிபூத்யை ஶ்வர்யத்தையும் தேவரீர்க்குத்தந்து, "நாம்பலபிறப்புப்பிறந்து திருத்தப்பார்த்தவிடத்திலும் திருந்தாத ஸம்ஸாரிகள் குருடைத்தீர்த்து நமக்காளாம்படிதிருத்தித்தருகைக்கு இவரொருவரைப்பெற்றோமே!" என்று நிரதிஶய வ்யாமோஹத்தைப்பண்ணி, "ஒருகாரியத்திலெப்போதிவர் நம்மைநிய

மிப்பது" என்று அவஸரப்ரதீக்ஷராய்க் கொண்டு ஸர்வகாலமும் இங்ஙத்தைக்கு வியேயராய்ப்போராநின்றார் என்பதுயாதொன்று. (யஸ்ய:-ஸவதி) இப்படி ஆஶ்ரிதபரதந்த்ரராய் அத்தாலே ஸத்தைப்பெற்றபடி. "ஆத்மாநம் நாதிவர்த்தேயா:" "தேவுந்தன்னையும்" என்னக்கடவதிறே. நிரங்குஶஸ்வதந்த்ரனானவன் ஒருக்காலாகவிசைந்துநிற்கிலோவென்ன ( ஸதாஸவதி ) என்கிறார். ஸ்வாதந்த்ர்யத்தாலே தன்ஸத்தையின்றிக்கேதன் ஸ்வரூபஸ்திதியழியக்காரியம்பார்க்குமோ!; தேவரீரளவில் வ்யாமோஹத்தாலே பரதந்த்ரனாகையன்றிக்கே தன்ஸ்வரூபஸ்திதிக்காகப் பரதனாகையாலே எப்போதும் இஸ்ஸ்வபாவத்துக்குக் குலைத்தலில்லை. (தஸ்மாத்) ஆகையாலே, தேவரீர் ஆஶ்ரிதஜநங்களின் பாபத்தைப்போக்குகைக்கு ஶக்தரன்றோவென்கிறார். ... ௧௭.

కాలత్రయేపికరణత్రయనిర్మితాతి
పాపక్రియస్యశరణంభగవత్క్షమైవ ।
సాచత్వయైవకమలారమణేర్థితాయ
త్క్షేమస్సఏవహియతీన్ద్రభవచ్ఛ్రితానామ్॥౧౮॥

"உபாயபூதனானவீஶ்வரன் நமக்கு ஸவ்யனாயிருந்தாலும், அநாதிகாலம் தவாஜ்ஞாரூபஶாஸ்த்ரமர்யாதையை உல்லங்கித்து கரணத்ரயத்தாலும் அதிக்ரூரமான பாபங்களைக்கூடுபூரித்து இப்போதுமதிலே முதிரநடவாநின்றவனளவில் ஈஶ்வரனுக்குண்டானஶீற்றத்தை, அவன்றன்னை

யேயிரந்துகாற்கட்டியாற்றிக்கொள்ள வேண்டிய
ன்ரே இவனுக்கிருப்பது" என்றெம்பெருமானு
ர்க்குத்திருவுள்ளமாக ; தான் மருந்துகுடித்து
ப்பிள்ளை நோயைப்போக்கும் வத்ஸலையானதா
யைப்போலே, இந்தாயான தேவரீரும் ஆஶ்ரித
ரானவடியோங்களுக்காக பிராட்டிக்குவல்லபனா
னவெம்பெருமான்றிருவடிகளிலே ஸாவாபராய
ங்களையும் பொறுத்தருளவேணும் என்று ப்ரார்
த்தித்தருளுகையாலே அடியோங்களுக்கு அந்த
க்குறையில்லையென்கிறார்.

(காலத்ரயேபி) பூதகாலத்திலுள்ள பாப
மாத்ரமன்றிக்கே காலத்ரயத்திலுமுண்டான பாப
ங்களுக்கும் பொறைகொள்ளவேணுமாய்த்து.
" க்ருதான் க்ரியமாணன் கரிஷ்யமாணுஞ்ச என்
றத்தைச்சொன்னபடி. (கரணத்ரயேத்யாதி) ஒரு
கரணத்தால் பண்ணினவற்றுக்குப் பொறைகொ
ள்ளுகையன்றிக்கே கரணத்ரயோபார்ஜிதங்களா
னவற்றுக்குப் பொறைகொள்ளவேணும். இத்
தால் - "மநோவாக்காயை:" என்றத்தைச்சொ
ல்லுகிறது. (ஸர்மித) என்கையாலே -இவைதான்
ஸங்கல்பித்தமாத்ரமன்றிக்கே பத்தும் பத்தாகச்
செய்தவையென்கை. (பாபக்ரிய) என்கையாலே-
அக்ருத்யகரணத்தையும்; (அதிபாப) என்கையா
லே - பகவதபசாராதிகளையும் சொல்லுகிறது.
இத்தால் " அக்ருத்யகரண க்ருத்யாகரண பகவ
தபசார பாகவதாபசாரா ஸஹ்யாபசார ரூபநா
நாவிதாநந்தாபசாரான்" என்றத்தைச்சொன்ன

படி. (ஶரணம்ஹமவக்ஷமைமவ) இப்படியிருந்துள்ள பாபத்தையுடையவனுக்கு எம்பெருமானுடைய அபராயஸஹத்வமாகிற க்ஷமையொழிய வேறுபுகலில்லை. (ஸாபேத்யாதி) அந்தபொறைதானும், தேவரீர்தம்மாலே ஸ்ரீயஃபதிதிருவடிகளிலே "மநோவாக்காயைः" என்று துடங்கி "ஸர்வாநஶேஷதः க்ஷமஸ்வ" என்றுப்ரார்த்திக்கப்பட்டதென்பெதுயாதொன்று, அது, தேவரீர்திருவடிகளைப்பற்றியிருக்கும் ஆஶ்ரிதஜநங்களுக்குப்பிழைக்கலாம்படி வைத்த தண்ணீர்ப்பந்தலிறே. (த்வயைவ) "அஹிமாநாந்தர்ஹதர்க்குக் கார்யம்செய்யவேணும்" என்று ஈஶ்வரனோடே மன்றுடும்படியான ஸ்வரூபத்தையுடைய தேவரீரன்றோ ப்ரார்த்தித்தருளிற்று. "இநியாமுறுமை - அடியேன் செய்யும்விண்ணப்பம் - மெய்நின்று கேட்டருளாய்" என்று ப்ரயமாசார்யர் ப்ரார்த்தித்தபடிகண்டால் அவரடிபணிந்தவிவர்க்கு மிது வன்றோ வநுஷ்டாநம். (கமலாரமணே) அஹ்ருதயமானவுக்தியையும் ஸஹ்ருதயமாக்கிக் கார்யங்கொள்ளுமவளும், அவள்தன்னையு மதிஶங்கைபண்ணி ஆஶ்ரிதரைநோக்குமவனுமான ஶேர்த்தியிலேயன்றோ ப்ரார்த்தித்தது. (அர்த்திதா) தாமுமவனுமறிந்ததாக நெஞ்ஜாலேயபேக்ஷித்தவளவன்றிக்கே, பின்புள்ளார்க்கும் இது கொண்டு வழக்குப்பேசலாம்படி பாஶுரமிட்டன்றோப்ரார்த்தித்தது. அர்த்தித்தார் கார்யம்செய்தேநிற்கவேண்டும்படிபற்காட்டியன்றோ போந்தது. (ஸ்வஸ்திரிதாநும் - ஸர்வஹி - க்ஷேமः) தேவரீருடை-

யஸ்வபாவத்தையும் அபிமாநவிஷய ஸ்வபாவத்தையும் ப்ரார்த்தநாப்ரகாரத்தையு மநுஸந்தித்தால், தேவரீர்திருவடிகளைப் பற்றினவர்களுக்கு ஆனைக்கழுத்திலிருப்பாரைப்போலே நிர்பரராயிருக்கைக் குறுப்பான ரக்ஷையதுவேயிறே. ௧௮.

శ్రీమన్ యతీన్ద్ర భవదీయపదాబ్జసేవాం
శ్రీశైలనాథకరుణాపరిణామదత్తామ్।
తామన్వహంమమవివర్ధయనాథతస్యాః
కామంవిరుద్ధమఖిలంచనివర్తయత్వమ్ ॥౧౯॥

இப்படி எம்பெருமானாருடைய திவ்யவைபவத்தை தம்முடைய ப்ரேமாநுகுணமாகப் பேசுகையிலே யிறங்கினவிவர், முதலிரண்டு ஶ்லோகத்தாலே — ஆழ்வார்களளவிலும் அவர்களுகந்தவிஷயமான வெம்பெருமானளவிலும் எம்பெருமானார்க்குண்டான ப்ராவண்யாதிஶயத்தையும் ஸ்வாஶ்ரிதர்க்கு ப்ராப்யப்ராபகபூதராயிருக்கிற படியையும்பேசி, மேல்மூன்று ஶ்லோகத்தாலே — தமக்கபேக்ஷிதங்களான புருஷார்த்தங்களை அவர் திருவடிகளிலே ப்ரார்த்தித்து, அநந்தரம் ஶ்லோகத்தாலே — உடையவர்திருவடிகளிலே — ப்ரேமாபாவத்துக்கும் இதரவிஷயப்ராவண்யத்துக்கு மடியானபாபத்தைப்போக்கியருளவேணுமென்று விண்ணப்பம்செய்து, மேலாறுஶ்லோகத்தாலே — பதத்ரயார்த்தநிஷ்டைக்கு விரோதிகளானவ க்ருத்யகரணாதிகளையும் அபசா

ராஸிகளையும் பரக்கப்பேஸி, மேலொரு ஸ்லோகத்தாலே-* அநந்தக்லேஸபாஜநமான தேஹத்தோடே பொருந்தியிருக்கைக்கடியான பாபத்தைப்போக்கவேணுமென்று, அநந்தர மிரண்டு ஸ்லோகத்தாலே - யாமுநாசார்யப்ரஸ்ருதிகளருளிச்செய்த தோஷஸமூஹங்களுக்கெல்லாம் கொள்கலமான வெனக்கு தேவரீருடையக்ருபையொழிய வேறு புகலில்லையென்று, மேல்மூன்று ஸ்லோகத்தாலே-அடியேனுடைய வநிஷ்டங்களைப்போக்கி இஷ்டத்தைத் தந்தருளவேணுமென்றும் அவர்தம்முடையகார்யங்களைச்செய்கைக்கு ஸக்தரென்றும் அவர் மத்யத்ரயத்தில் ஸர்வேஸ்வரன் றிருவடிகளில்பண்ணின ப்ரபத்தியேதமக்குப் பேற்றுக்குடலென்று மருளிச்செய்தாராய் நின்றார்கீழ் ; இனி மேலிரண்டு ஸ்லோகத்தாலும் - எம்பெருமானார் திருவடிகளில் ஸேவையாகிற பரமப்ராப்யம் நித்யாபிவ்ருத்யமாய்ச் செல்லவேணுமென்றும் அதுக்கு ப்ரதிபந்தகமான துர்விஷயஸங்கம் நஸிக்கவேணுமென்றும் உடையவர்திருவடிகளிலே ப்ரார்த்தித்து, இப்ரபந்தமுகேந அடியேன் விண்ணப்பம்செய்தவித்தை ஸாதரமாக வங்கீகரித்தருளவேணுமென்றபேக்ஷித்துஸ்தோத்ரத்தைத் தலைக்கட்டுகிறார்.

அதில் முதல்ஸ்லோகத்தாலே -தேவரீர்திருவடிகளில் ஸேவையாகிற பரமப்ராப்யமேநமக்கு நித்யாபிவ்ருத்யமாம்படியாகவும், அதுக்கு இ

டைநஶ்வரான இதரவிஷயஸங்கமறும்படியாகவும் தேவரீரே செய்தருளவேணுமென்று எம்பெருமானாரை ப்ரார்த்தித்தருளுகிறார்.

(ஸ்ரீமந்யதீந்த்ரேத்யாதி) (ஸ்ரீமந்) ஶேஷவத்துஸவகைங்கர்யமாகிறநிலைநின்ற ஸம்பத்தையுடையவரே. (யதீந்த்ர) ஆத்மஸ்வரூபாநுரூபமான ஸம்பத்தைஸ்வஜிக்குமளவில் எனக்கென்று நாக்குநீட்டாதபடி இந்த்ரியங்களை நியமித்துக்கொண்டு போரும்படியைப்பற்ற (யதீந்த்ர) என்று ஸம்போதிக்கிறார். "ஆம்பரிஶதிந்த்ர-கொண்டு" என்று ப்ராப்யமான கைங்கர்யத்தைச்சொன்னவனந்தரம், "ஐம்புலனகத்தடக்கி" என்று அதிலேஸ்வப்ரயோஜநவைஷ்யியாலே ப்ரவணமாகிற இந்த்ரியங்களை நியமித்துக்கொண்டுபோரும்படியைச்சொல்லிற்றிறே. அன்றிக்கே, தமக்கபேக்ஷிதமான ப்ராப்யத்தைத்தருகைக்கீடான ஜ்ஞாநாதிஸம்பத்தையுடையவரென்றும் அதுக்கு விரோதியைப்போக்கவல்ல ஶக்தியையுடையவரென்றும் நினைத்து (ஸ்ரீமந்யதீந்த்ர) என்று ஸம்போதிக்கிறாராகவுமாம். (த்வதீயபதாப்ஜஸேவாம்) தம்முடைய ப்ராப்யவேஷமிருக்கிறபடி. வருத்தஶேஷியான தேவரீருடையநிரதிஶயபோக்யமானதிருவடிகளில் நிரந்தராநுபவமாகிறஸேவையை. "இராமானுஶன்சரணாரவிந்தம் நாம்மன்னிவாழ" என்றும் "நந்தலைமிசையே பொங்கியகீர்த்தியிராமானுஶனடிப்பூமன்னவே" என்றும்பிள்ளையமுதனார்உபக்ரமோபஸம்ஹாரங்களிலே

பேஶினப்ராப்யத்தைக்கணிஶிக்கிறது. "இந்தப்ராப்யம் நீரும்முடையயத்நத்தாலே ஸாதித்துப்பெற்றதோ" என்ன; அன்று, உபாயப்ராப்தமென்கிறார் (ஸ்ரீஶைலநாயகருணாபரிணாமஜத்தாம்) எங்களுடைய ஆசார்யரானபிள்ளை தாமெப்போதுமநுபவித்துக்கொண்டுபோருகிற இந்தபரமப்ராப்யத்தை யுபகரித்துக்கொண்டே நிற்கவேண்டுவெடிதடையறப்பெருகுகிற தம்முடையநிர்ஹேதுகக்ருபைக்குப் போக்குவீடாக, முலைக்கடுப்பாலே பாலைத்தரையிலேபீச்சுமாப்போலே, எனக்கபேக்ஷையின்றிக்கேயிருக்கத் தம்முடையது பேறாக ஸர்வஸ்வதாநம்பண்ணியருளினார், அத்தாலே எனக்குவந்தது கைகூடிற்று. "பிள்ளையருளாலேபெற்றீராகில் இப்போது நம்மைக்கலபேக்ஷிக்கிறதென்" என்ன; அருளிச்செய்கிறார் (தாமந்வஹம்மமவிவர்தய) என்று. தேவரீரிப்போதுபுதுக்கவொன்றுண்டாக்க வேண்டுவதில்லை, பிள்ளை அருளாலே யுபகரித்தவத்தை நாள்தோறும் வளர்த்தருளுகையேயுள்ளது. அவரும் "அப்படியேசெய்யக்கடவோம்" என்னுமிடம் தோற்ற கருணாம்ருதபரிணமரூபகடாக்ஷ வ்ருஷ்டிகளாலே குளிரவழியப்பார்க்க, அத்தாலேநிரஸ்தஸமஸ்ததுக்கரராய், பூர்ணமாகவுபகரியாநின்றுகொண்டு உத்தரோத்தரம் தழைத்துச்செல்லும்படி வளர்த்தருளவேணுமென்கிறார் (தாமந்வஹம்மம்விவர்தய) என்று "உபகரிக்கிறப்ராப்யத்தின் கௌரவமாதல் இவ்வுபகாரத்துக்கிலக்கானவென்னுடைய லாகவமாதல் பாராதே

தம்மளவிலே யுபகரித்தருளுவதே !” என்று விதுரராகிறார் (தாம்) என்று. இப்படி செய்ய வேண்டும் நிர்பந்தமென்னென்ன வருளிச்செய்கிறார் (நாத) உடைமையானதின் காரியஞ்செய்கை உடையவனுக்கே பாரமிறே. “ஸர்வாஶ்ரிதஸாதாரணரான நமக்கு இவனொருவனையும்பார்த்திருக்கப்போமோ” என்றுபேக்ஷித்தருளாதே தேவரீர்திருவடிகளி லநுபவத்தாலல்லது செல்லாதவென் ப்ரக்ருதியைத் திருவுள்ளம்பற்றியருளி எனக்கொருவனுக்குமே முற்றூட்டாம்படி யவ்வநுபவத்தை யிடைவிடாமல் வர்த்திப்பித்தருளவேணுமென்கிறார். இப்படிநாம் அநுபவத்தை வளர்த்துக்கொடுக்கிலும் இதுக்கிடைச்சுவரான விரோதியைத்தானே கழித்துக்கொள்ளுகிறான் என்று விரோதிநிவ்ருத்திக்கு என்கையிலேயென்னைக்காட்டித்தரவொண்ணாது, அதுவும்தேவரீர் தாமே செய்தருளவேணுமென்கிறார் (தஸ்யாஹ்காமம்விருத்தமவிலம்பநிவர்த்தயத்வம்)என்று. தேவரீர் திருவடிகளில் ஸேவையாகிறவிந்த பரமப்ராப்யத்துக்கு விருத்தமாய்விஷயஸங்கத்தாலே பஹுவிதமாயிருந்த விஷயப்ராவண்யரூபமானகாமத்தை ஸவாஸநமாகப் போக்கியருளவேணும். இங்ஙனன்றிக்கே, இதுக்குவிருத்தமான ஐஶ்வர்யாநுபவமாகிற காமத்தையும், ஆத்மாநுபவத்தையும், பகவதநுபவமாகிற ப்ரதிபந்தகங்களெல்லாவற்றையும் போக்கியருளவேணுமென்கிறாராகவுமாம். இதில் முதற்பட்டயோஜ

னைக்கு ஔசித்யமுண்டு ; "ஶப்தாதிபோகரு சிரந்வஹமேயதேவ" "ஶப்தாதிபோகவிஷ யாருசிரஸ்மதீயா" என்று ஶப்தாதிவிஷயப்ரா வண்யமேயிதுக்கு ப்ரதிபந்தகமாகக் கீழேயரு ளிச்செய்ததுக்குச்சேருகையாலே. இப்படிஎம் பெருமானார் திருவடிகளிலே தமக்கபேக்ஷிதமாய் ஸ்வரூபாநுரூபமுமான புருஷார்த்தத்தை, அநா திகாலமிந்தபுருஷார்த்தத்துக்கு இடைச்சுவராய் இப்போது மநுவர்த்தித்துப்போருகிற ஆர்வா சீநவிஷய ப்ராவண்யநிவ்ருத்திபூர்வகமாகப்பல படியாகப்ப்ரார்த்தித்துக்கொண்டுபோந்தார். ௧௯.

విజ్ఞాపనం యదిదమద్య తు మామకీనం
అఙ్గీకురుష్వ యతిరాజ దయామ్బురాశే ।
అజ్ఞోయమాత్మగుణలేశవివర్జితశ్చ
తస్మాదనన్యశరణో భవతీతి మత్వా ॥ ౨౦ ॥

என்னுடையசாபலத்தாலே அடைவுகெட விண்ணப்பம்செய்த விந்த ஸ்தோத்ரத்தை, அ டியேனுடைய தோஷங்களைப்பார்த்து உபேக்ஷி யாமலங்கீகரித்தருளவேணுமென்று ஸ்தோத்ர த்தை நிகமித்தருளுகிறார்.

(விஜ்ஞாபநம்) தம்முடையவபேக்ஷிதங்களை த்திருவடிகளிலே விண்ணப்பம்செய்ய அதுப்ர பந்தமாய்த்தலைக்கட்டிற்று. (இதம்) ஆர்க் ஸாதரமாகவிருக்கிறபடி. "செவிக்கினியசெ சொல்" என்கிறபடியே, ஒன்றை நினைத்தொ

றைச்சொன்னதன்றிக்கே நினைவும் ஶொலவும் ஶேர்ந்திருக்கும்படி ஶொன்னதாயிருக்கை. (அஞ்யது) பூவலரும்பொதுபோலே பேசுகிறதுமைய யில் ஶெவ்வியைச்சொன்னபடி. இச்சொவடுபோவதுக்குமுன்னே திருச்செவிசாற்றி, "இளைய புன்கவிதை" என்கிறபடியே ஶப்தார்த்தவிஷயவைஶத்யத்தை உள்ளபடியறிந்து பேசுகைக்குத்தக்க ஜ்ஞாநஶக்திகளின்றிக்கே யிருக்கச்செய்தேயும், தன்னுகப்பாகப்பண்ணும் வைலக்ஷண்யமற்றிருந்தாலும் "நம்மடியார்ஶொன்னதன்றோ" என்று திருவுள்ளமுகந்து கேட்டருளத்தக்கதென்கை. (அங்கீகுருஷ்வ) ஆருடைய ப்ரயோஜநத்துக்கார் ப்ரார்த்திக்கிறார். இவன்வாக்கிலிப்படி ... டாது, இதுக்குக்ருஷிபண்ணிப்போந்த நம்ம ...ன்றோப்ரயோஜநம் என்று அங்கீகரித்தருளவே ...றுமென்கிறார். (யதிராஜ) இத்தலையில் தோஷத்தைப்போக்கவல்ல உடையவரன்றோ தேவரீர். (தயாம்பு ராஶே) பரிறியெடுத்தெறியும்படியான தோஷம் இத்தலையிலேயுண்டானாலும் திருவடிகளைப்பூண்டுகொள்ளலாம்படியிருக்கிற அருட்கடலன்றோதேவர். (அஜ்ஞோயம்) இவன்றான்ஸ்வரக்ஷணத்துக்கு நம்மையொழிய வேறுகைம்முதலுண்டென்றிருக்குமவனோ; நம்மையொழியமற்று... pinion ... மோ. (ஆத்மகுணலேஶவிவர்ஜித ...ruary 1935 acce... ...பில ஆத்மகுணமுண்டாக நினைத்துக்குடலென்றிருக்குமவனோ.

நம்க்ருபைக்குத் தண்ணீர்த்துரும்பாகச்சொல்ல த்தக்கதொரு ஸத்குணலேசமுண்டோ. (தஸ்மாதநந்யசரண:) ஆகையாலே இவனுக்கு நம்மையொழிய வேறுபுகலுண்டோ. ஸ்வரக்ஷணத்துக்கொரு உபாயாந்தரமறிந்திருத்தல் செய்யத்தக்க ஜ்ஞாநமில்லாதவனுமாய் ஸத்துக்களங்கீகரிக்கைக்குறுப்பான ஆத்மகுணஸம்பந்தரஹிதனுமாயிருக்கையாலே வேறொருபுகலில்லாதவன். (இதி மத்வா) இப்படி ஸஹவஸநுஸவாதிகளிலந்யபரதையைத்தவிர்த்துத் திருவுள்ளம்பற்றியருளி யிதனையங்கீகரித்தருளவேணுமென்று ப்ரார்த்தித்தருளினாய்த்து. ... ... ... ௨௦.

பிள்ளைலோகம்ஜீயர் திருவடிகளேசரணம்.

யதீந்த்ரப்ரவணர் திருவடிகளேசரணம்.